# முரசொலி

2 அணா

மு.கருணாநிதி

முரசு 1 | சென்னை | 1 — 10 — 54 | வெள்ளி | ஒலி 27




## குறளோவியம்

★

யாராவது நம்மை நினைக்கும் போது தும்மல் வருமென்றும், அப்படித் தும்மிடும் போது வாழ்த்து சொல்வது என்றும் ஒரு நம்பிக்கை பழங்காலந் தொட்டு தமிழகத்தில் பரவி நிற்கிறது. அந்தப் பழக்கத்தை வைத்து, வள்ளுவனார் ஒரு அரிய காதல் காட்சியை சித்தரிக்கிறார்.

சோலைப் பசும் புற்றரையிலே— [illegible] மகளும், காதல் மகனும் இன்ப போதை மீட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆரத் தழுவி அகமகிழும்போது முகத்தில் பதிந்த முழுநிலவுப் பெண்ணின் கரிய கூந்தலின் சிறு தொகுப்பு, அவனையு மறியாமல் அவன் மூக்கிலே பட்டதாலோ என்னவோ தும்மிவிட்டான். உடனே அந்த அணங்கு, அவனை "வாழ்க!" என்று வாழ்த்தினாள். வாழ்த்தியவளுக்கு திடீரென ஒரு நினைவு எழுந்தது.

"ஆம்ம்—எந்தப் பெண்மயில் உம்மை நினைத்தாள்? அதனால் தும்மினீர்?" என்று ஒரு கேள்வியைப் போட்டு ஊடல் புரிந்தாள். செல்லமாக அழுதாள். காதலனுக்கு மீண்டும் தும்மல் வந்தது. காதலி, ஐயத்தால் அழுவாளே என்று அந்த முறை தும்மலை அவன் அடக்கிக் கொண்டான். அவளோ, காதலனை நினைத்து ஏங்குகிற இன்னொருத்தி இருக்கிறாள் என்பதை நிச்சயமாக முடிவு செய்து கொண்டவள் போல,

"ஓகோ! இன்னொருத்தி உம்மை நினைப்பதை, எனக்கு காட்டிக் கொள்ளாமல், தும்மலை அடக்கி மறைக்கிறீரோ?" என்று மீண்டும் அழுதாள். அதை விளக்கும் குறளோவியங்கள் இரண்டு—இதோ!

(க) "வழுத்தினாள் தும்மினே னாக
வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று."

(உ) "தும்முச் செறுப்ப வழுதாணு
மருள்ள
லெம்மை மறைத்திரோ வென்று."

## செப்படி வித்தை!

★

“காங்கிரஸ் கட்சியைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் மக்களுக்கு நலன்பல தரக்கூடிய கட்சி” என்றெல்லாம் மந்திரிமார்கள் போகுமிடமெங்கும் தக்க பக்க மேளத்துடன் கச்சேரி நடத்திவிட்டு வருவதை பார்க்கிறோம். ஆனல் உண்மையிலேயே காங்கிரஸ் கட்சி வளர்ந்துதான் வருகிறதா, மக்களின் பேராதரவை அந்தக் கட்சி சம்பாதித்துக் கொண்டுதானிருக்கிறதா என்ற கேள்விகளுக்கு, புது டெல்லியில் இந்த வாரம் நடைபெற்ற காரியக் கமிட்டி நடவடிக்கைகள் பதிலளிப்பது போல் அமைந்திருக்கிறது. 1952ல் காங்கிரஸின் ஆரம்ப உறுப்பினராக இருந்த தொகை, 88லட்சத்திலிருந்து 71 ஆயிரமாகவும் தீவிர அங்கத்தினரின் தொகை 3லட்சத்திலிருந்து 71 ஆயிரமாகவும் குறைந்துவிட்டிருக்கிறது. இந்தத் ‘திடீர்சரிவு’ 1952க்கும் 1953க்கும் இடையில் ஏற்பட்டதாகும். ஓராண்டு காலத்திலே, அதுவும், தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பேரிகை கொட்டி விட்டது என்று வான்முட்ட பெருமை அடித்துக் கொண்ட பிறகுதான் இந்தத் தேய்பிறை ஏற்பட்டிருக்கிறது என்பதை மாற்றுக் கட்சிக்காரர்கள் மறந்து விட மாட்டார்கள்.

“நாங்கள் ‘போலி அங்கத்தினர்கள் சேர்வதை தடுத்ததின் விளைவுதான் காங்கிரஸ் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது”

என்று பலவந்தராய் மேத்தா தசாவதாரம் எடுத்து பிரச்சாரம் செய்தாலும், எல்லோரையும், எல்லா காலத்திலும் ஏமாற்ற முடியாது என்ற பேருண்மையை மதவாதிகளே உணர்ந்து விட்ட போது மக்களா உணர்ந்திருக்க மாட்டார்கள்! உணர்ந்திருப்பார்கள்! உணர்ந்திருப்பார்கள்! நன்றாக உணர்ந்திருப்பார்கள்! ஏழாண்டுகளாக எழுதப் பட்டுவரும் துயரக்காவியத்தில் அங்கம் பெற்றவர்களாயிற்றே அவர்கள்! அவர்களிடமா செல்லும் செப்படி வித்தை!

# இந்தோனேஷிய பிரதமர் இடித்துக் காட்டுகிறார்!

அகம் குளிர்ந்ததாம். முகம் மலர்ந்ததாம்! [illegible]க்கின் நூ வந்திருந்தபோது அடைந்திராத மகிழ்ச்சியை, முகமதலி வந்திருந்தபோது அடைந்திராத பூரிப்பை, சூ-என்லாய் விஜயத்தின்போது பெற்றிராத களிப்பை இந்தோனேஷிய பிரதமர் ஆலி சஸ்த்ரோமியோயோ வந்திருந்த போது அடைந்தாராம்! பண்டிதரே சொல்லியிருக்கிறார் இவ்வாறு; “எத்தனையோ பிரமுகர்களை டெல்லியில் வரவேற்றிருக்கிறோம்; ஆனல் வேறு எந்த அரசியல் தலைவரையும் விட உங்களது விஜயத்தில்தான் அதிக மகிழ்ச்சியடைகிறோம். என்று,

பண்டிதர் பெருமைப் படுகிறாராம், அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லையாம்! அது மட்டும் கூட அல்ல. “இந்தோனேஷியா போன்ற அண்டை நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் பொதுவான பிரச்சினைகள் உள்ளன என்பது மாத்திரமல்ல, அதைவிட முக்கியமான சரித்திர, கலாச்சார பாரம்பரிய பந்தங்கள் நம்மிடையே உண்டு. பல்லாயிர ஆண்டுகளாக நாம் நெருங்கிய உறவு கொண்டிருந்தோம்” என்றுகூட மோதிலால் மைந்தர் புகழ்ந்து பாடியிருக்கிறார். வரவேற்கத் தக்கதுதான். ஆனல் வந்திருந்த விருந்தினர் பண்டிதரின் முகமூடியைக் கிழித்தெறிந்திருக்கின்றனர். அரசியலிலே ஐரோப்பாவின் முக்கியத்துவம் குறைந்து வருகிறது; ஆசிய நாடுகளின் பிரச்சினையை ஆசிய நாடுகளே தீர்த்துக் கொள்ள ஒத்துழைப்பு வேண்டும்” என்று மறைமுகமாக இடித்துக் காட்டியிருக்கிறார். நேருப்பண்டிதர் தன் குடையின் கீழுள்ள மாநிலங்களின் குரல்வளையை நெறித்துக் கொண்டிருப்பதை சஸ்த்ரோமியோயோ அறிவாரோ என்னவோ! தாய்மொழிகள் தர்பார் மண்டபத்தில் ஒலிக்கவேண்டுமென்பதை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கக் கூடாது என்று பண்டிதரின் ஆட்சிபீடம் கட்டளையிட்டிருப்பதை இந்தோனேஷியப்பிரதமர் பத்திரிகையில் படித்திருப்பாரோ என்னவோ! சஸ்த்ரோமியோயோ, ‘மனிதர் வர்க்கத்திற்கு எல்லையற்ற தொல்லை தரக்கூடியது ஆதிக்கஅரசியல். நமது காலத்தில், முடிந்தால் எக்காலத்திலுமே அதைத் தவிர்க்க வேண்டும்’ என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார். ஆதிக்க அரசியல்! இந்தச்சொல் பண்டிதரின் உள்ளத்தில் ஈட்டியாகத்தான் பாய்ந்திருக்கும் “நீமட்டும். சரித்திரத்தை முன்வைத்து இந்தோனிஷியாவோடு தொடர்பு கொள்ள முனைகிறாயே, உன்னுடைய துணைக்கண்டத்தின் தென்பகுதி மக்கள் வரலாற்றைக் காட்டி விடுதலை கோரி நிற்கிறார்களே, அதை மட்டும் அடக்கி ஒழித்துவிட பார்க்கிறாயே! அது ஆதிக்க அரசியல் அல்லவா! அதைத்தான் உன் எதிரிலே வீற்றிருக்கும் இந்தோனேஷியப் பிரதமர் குத்திக் காட்டுகிறார்” என்று நேருப் பண்டிதரின் மனச்சான்று கீறிக் காண்பித்திருக்கும். முகத்தைச் சுழித்திருப்பார், புருவத்தை நெறித்திருப்பார். அப்பேர்ப்பட்ட தாக்குதல்தான் இந்தோனிஷியப் பிரதமர் கொடுத்தது. பண்டிதர் இதை உணர்ந்திருப்பார்! அவராகவே உணர்ந்து கொண்டு விடுவதுதான் அவருக்கு உலகம் காட்டிவிடும் கௌரவத்திற்கு அழகாகும். ஜினிவா மாநாட்டின் சீரையும் சிறப்பையும்பற்றிப்பேசி விட்டு ‘இம்’ என்றால் சிறைவாசம்! என்று ஆட்சி நடத்தினால் வளர்ந்து கொண்டு வருவதாக எண்ணிக் கொண்டிருக்கும் ஆசியாவின் பெருமை ‘அல்ப ஆயுசா’கப் போய் விடும் என்பது உறுதி.




# தலையங்கம்

சென்னை [ 1—10—54 ] வெள்ளி



## குமரிக் குயில் இனி கூவாது!

கோயில் முழுதுங்கண்டேன்—உயர்
கோபுரம் ஏறிக்கண்டேன்
தேவாதி தேவனை யான்—எங்கு
தேடியுங் கண்டிலனே—

★

நித்தம் நித்தம் நீராடில்
நெடுமால் அருளைப் பெறலாமேல்
தத்தும் தவளை மீன்களும் அத்
தனிப் பேறடைய வேண்டாமோ?

★

ஆலயத்தில் ஆண்டவனைக் காணுது, அருள்பெற நீராடும் மாந்தர்களையும் பழித்துரைத்துப் புதியகொள்கைக்கு ஆக்கம் தந்த அந்த கவிதைக்குயில் மறைந்து விட்டது. உள்ளமெனும் சோலையிலே வெல்லமெனும் கவிதைப் பாட்டிசைத்து வாழ்ந்த அந்தப்புள்ளினத்து இசையரசு போய்விட்டது பறந்து!

ஆம்; கவிமணி தேசிக விநாயகம் இயற்கை யெய்தி விட்டார். அவரது சடலம் மண்ணுக்குள் மறைந்து விட்டது. ஆனல் பண்ணுக்குள் கலந்திருக்கும் இனிமைபோல், கண்ணுக்குள் சதிராடும் கருமணியைப் போல், அவர் தந்திருக்கும் கவிதைத் தொகுப்புகள்—விண்ணுக்கும் மேலாக ஆயுள்பெற்றவை. அழியாத சித்திரங்கள்—அழகு கலையாத காவியங்கள்—அத்தனையும் ரத்தினம்! அவரது பாடல்களிலே அருவியின் ஓசையிருக்கும், ஆற்றின் பெருவெள்ளம் இருக்கும். புயலுக்குப்பின் தோன்றும் அமைதியின் பரிபூரணத் தன்மை இருக்கும். கிளி மொழியிருக்கும். புலி முழக்கமும் கேட்கும். அத்தனையிலும் அவரது நல்ல உள்ளத்தின் படப்பிடிப்பு நிச்சயமாக இருக்கும்.

நாடு, மொழி, இனம், கலை, இவைகளைப் பற்றிய கவலைகள் தேசிக விநாயகம் அவர்களின் உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்தன என்பதை அவர்தம் கவிதைகள் விளக்கிச் சொல்லும். தமிழகத்து தாழ்வாரத்தில் தென்றல் நடை போட்டு, தெம்பாங்கு இசை கூட்டி, தேவிட்டாத மழலைமீட்டி, தென்பாண்டிக் கடல் முத்தின் புன்னகையும் காட்டிவரும் கவிதைப் பேரர்களை நமது கவிமணிக் கிழவர் ஆசையோடு, அள்ளியெடுத்து அணைத்துக்கொள்வார்!

அவரை இப்போது சாவு அணைத்துவிட்டது! அந்தோ நம்மைப் பிரிந்தார்—கவிதை மழை பொழிந்தவர் நம் கண்ணீர் மழையால் இதோ நனைந்தார்! அந்த உத்தமரின் உடலில் பரவிய தீயை அணைக்கும் சக்தி நம் கண்ணீருக்குக் கிடையாது; எனினும், அவர் கவிதை மூட்டிய தீயை வளர்க்கும் திறனைப் பெற்றது இந்தக் கண்ணீர்! ஆயிரம் பதினாயிரம் ஆசைகளை எண்ணிக்கொண்டிருக்கும் போதே மனிதன் குழிக்குப் போய்விடுகிறான்—யாரைக் கெடுக்கலாம்—யாரை வஞ்சிக்கலாம்—யாரை ஏமாற்றிப் பிழைக்கலாம்—யாரிடம் களவாடலாம்—யாரைக் கொலை செய்யலாம்—யார் வீட்டில் தீவைக்கலாம்—இப்படிப் பட்ட எண்ணங்களோடு சாவோரையல்ல குறிப்பிடுவது! அல்லது; பெண்டு பிள்ளைகள்—குடும்ப ஜனங்கள்—நிலபுலன்கள்—பணங் காசுகள்—இவைகளைப்பற்றி நினைத்து நினைத்து சாகும் நிலையினரையுமல்ல; இங்கே குறிப்பிடுவது! நாடுவாழ, மக்கள் வாழ, நாகரிகம் வளர, கலைஉயர, கவலை கவிழ; அருமையான ஏற்பாடுகள் அமையாதா என்று எண்ணி ஏங்குகிறார்களே; அத்தகைய நல்லவர்களின் பட்டியலிலே முதல் இடம் வகிக்கும் ஒரு சிலரில் முக்கியமானவர் நமது கவிமணி! மக்களின் ஆனந்த வாழ்வு அவரது கனவு! அந்த வாழ்வுக்கு இடையூறு விளைவிப்பவரை அவர் கண்டித்தே தீருவார். மக்கள் சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டை போடுபவர் யாராயிருப்பினும் அவர்களை கவிமணி எச்சரித்தேயிருக்கிறார். மக்கள்குரலை அலட்சியப் படுத்தும் மதோன்மத்தர்களை அவர் மதித்தது கிடையாது! உதாரணமாக, மொழிவழி மாகாணம் இன்றியமையாதது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக, அவர் அரசாங்கத்திற்குத் தந்த அறிவுரையே போதுமானது—மொழிவழி மாகாணத்துப் பிரச்சினையை மூடிவைத்தவருக்கு அவர் தந்த சம்மட்டியடியைப் படியுங்கள்—

> "காந்தியடிகளும் மொழிவழி மாகாணத்தின் இன்றியமையாமையைப் பலபடக் கூறியுள்ளார். இவற்றை எல்லாம் மக்கள் மறந்துவிடவில்லை. ஆனல் சில தலைவர்களோ யாவும் மறந்து பேசுகின்றார்கள். மறந்தவர்களுக்கும் மறவாதவர்களுக்கும் சில மோதல்கள்; சந்தி சிரிக்கும்படியான மோதல்கள்; என்ன விந்தை!
>
> இப்பொழுது மாகாணங்களை மாற்றியமைக்கத் தொடங்கினல் பெரும் கஷ்டங்கள்ஏற்படுமாம். ஆம்; உண்மை. கஷ்டங்களுக்குஅஞ்சிச் செய்யத் தகுந்தவற்றைச் செய்யாமலிருப்பதா? பிள்ளைப் பேறு கஷ்டமானதுதான், அதற்காக மணம் செய்து கொள்ள விரும்பாதவர் உண்டா? ஆட்சிபீடம் ஒருபோதும் ஒரு பூப்படுக்கையாக இருந்ததில்லை; இராது. கஷ்டங்களில்லாத இன்ப நிலையமாக அரசாங்கம் இருக்குமானல் அதை நடத்த நம்மூரிலுள்ள குப்பனும் சுப்பனும் போதுமே. தலைவர்கள் ஏன்?"

இவ்வண்ணம்—நியாயத்திற்காக வாதாடுவதிலே கவிமணி என்றும் சளைத்ததில்லை. அத்தகைய ஒரு பெரும் கிழவரை தமிழகம் இழந்து விட்டது. அவரது கனவுகள் பலிக்கப் போவதை அவர் காணுமலே போய்விட்டார்--ஆனல் அந்தக்கனவு பலிக்க அவர் தந்திருக்கிற கவிதைச் சுவடிகள் அருமையான அறப்போர்க் கருவிகள்! சுதந்திரப் போர்க் களத்திலே அந்தக் கருவிகளும் பயன்படும் ஒருசில முனைகளுக்கு! கவிதைக்கருவி தந்த கவிமணி மறைந்தார்! தமிழகம் அவரை மறவாது! குமரிக்குயில் இனி கூவாது!—ஆனல் அது பாடிய பாட்டுக்களின் எதிரொலி என்றும் அழியாது! வாழ்க கவிமணியின் திருப் பெயர்!



## அபாய அறிவிப்பு!

★

சென்ற வாரம் அமைச்சர் சுப்ரமணியம் ஈரோட்டில் பேசுகையில் 'நாட்டிலே புகுத்தப்பட்ட புதுக் கல்வித் திட்டத்தை நாங்கள் கை விட்டு விடவில்லை. ஒத்திவைத்திருக்கிறோம்' என்று குறிப்பிட்டதை நமது ஓவியர் சித்தரித்துக் காட்டியிருக்கிறார்.

# லட்சிய நடிகன்

“கூத்தாடிப்பயல்!”

“கிடக்கிறன் கிண்டல்காரன். மண்டலத்தோர் கண்டுமருளும் பிரபுக்கள் ஆட்சியை இந்தப் ஊர்சுற்றிப் பயலால் என்ன செய்ய இயலும்?”

இது போன்ற உரையாடல்கள் பிரஞ்சு நாட்டில் புரட்சி புகைந்து கொண்டிருந்த நாளில் பிரபுக்கள் வீட்டு மாளிகைகளில் அடிக்கடி நடைபெறும்.

பதினெட்டாம் நூற்றண்டு!

வால்டேரின் பேனவிலிருந்து ‘குபுகுபு’ வென்று குருதி கொட்டிக் கொண்டிருந்த காலம் அது. “மனிதனை மனிதனை எண்ணு! தேவனுக்குவது பிற இருக்கட்டும்!” என்று ரூசோவின் ‘சமுதாய ஒப்பந்தம்’ சந்து பொந்துகளிலெல்லாம் முரசறைந்து கொண்டிருந்த வேளை! அப்போது பிரான்ஸ் நாட்டின் மன்னனாக...பிரபுக்களின் தோழனாக இருந்தவன் மன்னன் லூயி. உரிமைக் கிளர்ச்சி செய்து வந்த உத்தமர்களுக்கு அவன் அளித்து வந்த பரிசு பாஸ்டில் சிறைதண்டனை அல்லது தூக்கு மேடை! இவைகள்தான்.

உத்தமர்களின் உயிரைக் குடிப்பதற்காக ஊராள்வோரின் ஒற்றர்கள் ‘உலா’ வந்து போகாத நாளில்லை. துரோகிகளின் இரத்தத்தை ருசிபார்த்த தூக்குமேடை தியாகிகளின் ரத்தத்தை ருசிபார்க்க ஆரம்பித்து விட்டது. சண்டாளர்களை சாகடிக்கும் சாவுமேடை சன்மார்க்க சீலர்களை சித்ரவதை செய்ய முற்பட்டது.

லூயி மன்னனின் சர்வாதிகாரம் சதங்கை கட்டி சதிராடிக் கொண்டிருந்த சமயத்தில் லா புஸியர் கிளம்பினன்.

சார்லஸ் லாபுஸியர் சாமான்யன்தான். பிரான்ஸ் நாட்டின் பிற்கால வாழ்வுக்காக தன் உயிரையே பணய மிட்டுவிட்டு தீவிர பிரச்சாரம் செய்த புரட்சிக்காரன் அவன். ஆயிரமாயிரம் கட்டிளங்காளைகளை களம்புகச் செய்த புரட்சிநடிகன் லாபுஸியர்.

லாபுஸியர் பொதுக் கூட்டங்களிலே பேசுவதில்லை. அந்தப் பொறுப்பை வால்ட்டேரும் ரூஸோவும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். லாபுஸியருடைய அன்றாட வேலை, நாடகங்களின் வாயிலாக நாட்டு மக்களின் மனதிலே புரட்சிக் கருத்துக்களை புகுத்துவது. கூத்திலே கோமாளியாகத் தோன்றுவான். சிந்தனையைத் தூண்டும் சிறந்த கருத்துக்களைக் கூறி பொதுமக்களைச் சிரிக்க வைப்பான். சீமான்களின ஆதரவினல் சிங்காதனத்தில் அமர்ந்து கொண்டு சீறிவிழும் லூயிமன்னனின் கொடுங்கோலாட்சியை கவிழ்க்க வேண்டுமென்று, சிறுகதைகள் வாயிலாக எடுத்துரைத்து இரசிகர்கள் மனதை மாற்றுவான்.

லாபுஸியரின் ஆசை பட்டக்காரனாக வேண்டு மென்பதல்ல, ...தானம் லூயி மன்னனின் கொடுங்கோலை முறிக்க வேண்டு மென்பதே. பிரபுக்கள் சபையில் தானும் ஒரு உறுப்பினனாக வேண்டுமென்பதல்ல லாபுஸியரின் எண்ணம். அவனுடைய எண்ணம் கோமான்களின் கொட்டத்தை அடக்கி சீமான்களுக்குள்ள செல்வாக்கை சிதைத்து மனிதன் மனிதனாக வாழ வேண்டுமென்பதே. லாபுஸியர், மன்னனின் பெயரால் — மதத்தின் பெயரால் மக்களை மடமைக் குள்ளாக்கிவரும் மதக் குருக்களின் அன்றாட பித்தலாட்டங்களை — புனை சுருட்டுகளை மக்கள்மனம் பற்றியெறியும் படி நகைச்சுவை ததும்ப எடுத்துக்கூறி அறிவுப் புரட்சியை கிளப்பவேண்டு மென்பதையே ஜீவலட்சியமாகக் கொண்டிருந்தான்.

லாபுஸியர் படிப்படியாக அரங்க மேடையிலிருந்து அரசியல் மேடைக்கு வந்து விட்டான். சம்பாதித்த பணத்தை புரட்சிக்கென்றே செலவு செய்தான். நாளடைவில் அவன் புகழ் பிரான்ஸ் நாடு முழுதும் பரவியது. லாபுஸியர் பேசுகிறனென்றல் திருவிழா பார்க்க வருவதைப்போல மக்கள்திரள்திரளாக வந்து குவிந்துவிடுவார்கள். மன்னனின் நண்பர்கள்கூட மாறு வேடமிட்டுக் கொண்டு லாபுஸியரின் பேச்சைக் கேட்கத் தொடங்கினர்கள். ஒற்றர்கள் ஒதுங்கி நின்று சுவைத்தார்கள்.

லாபுஸியர் ஆடம்பரமான வரவேற்பை விரும்பாதவன். சந்தை கடைத்தெரு, குக்கிராமங்கள்— இவைகளிலெல்லாம் லாபுஸியர் திடீரென்று முழக்கமிட ஆரம்பித்துவிடுவான். ஒருசில நாட்களில் லூயிமன்னனைப்போல வேடம் தரித்துக்கொண்டு அவனுடைய ஆட்சிபீடத்தின் அவல நிலையை அப்படியே படம் பிடித்தாற்போல நடித்துக் காட்டுவான். மற்றெரு நாளைக்கு மேரி அன்டோனிட்டைப் போல வேடமிட்டு வயிறு வெடிக்கச் சிரிக்கவைப்பான் பொதுமக்களை. இவ்வாறு கிண்டல் பேச்சாலும், கேலி மொழிகளாலும் பிரான்ஸ் நாட்டின் பேராதரவை பெற்ற லாபுஸியரை லூயிமன்னன் குறிவைத்துவிட்டான். “கோமாளி கொடுஞ்சிறையில் அடைபட்டு கண்ணீர் வடிக்கப்போகிறனே” என்று விவேகிகள் வருந்தினர். ஆனல் அவர்கள் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. லாபுஸியருக்கு வேண்டியவர்களும் உறவினர்களும் அரசாங்க அதிகாரிகளாக இருந்ததால் அவனை அதிலிருந்து காப்பாற்றி “பொதுஜன அமைதி இலாகா” ஒன்றில் உறுப்பினராக சேர்த்து விட்டார்கள். இதையறியாமல் லூயிமன்னன் கோமாளியின் கொட்டமடங்கிற்று என்று வெற்றி முரசு கொட்டினன்— வீரமுழக்கமிட்டான்புலியாண்ட லூயிமன்னனுக்கு,புலி எதற்குப் பதுங்குகிறது என்று தெரியவில்லை. லாபுஸியர் அரசாங்க அலுவலகத்திற்கு பணியாற்ற செல்லும்போது அவனுடைய நண்பர்களை அழைத்து, “நான் அரசாங்க அதிகாரியாகப் போய் விட்டேனென்று தப்புக் கணக்குப் போட்டுவிடாதீர்கள் நான் இந்த வேலைக்கு வந்த மர்மத்தை பின்னர் தெரிந்துகொள்ளுங்கள்’ என்று கூறிவிட்டுச் சென்றன்.

நாட்கள் நகர்ந்தன. லாபுஸியரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த வேலை மிக அபாயகரமானது. ஆனல்பொறுப்புள்ளது.கோழைகளும் தொடை நடுங்கிகளும் பார்க்க முடியாத பணி அது. பாஸ்டில் சிறையை தினசரி பார்வையிடவேண்டும். மரணத்தின் மடியிலே—சாவின் சன்னிதானத்திலே நின்று புழுவாகத் துடித்துக் கொண்டிருக்கும் கைதிகள் எழுப்பும் சோகக் குரல்களை கேட்டுச் சகித்துக் கொண்டிருக்கவேண்டும்.

லாபுஸியர் அவர்களுக்காக இரக்கப்பட்டான். இருட்டறைக் குள்ளிருந்து இன்னல்களை அனுபவிக்கும் தன்னலங் கருதா அவனது தோழர்களை விடுவிக்க இரவு பகலாக முயற்சித்தான்.

லூயிமன்னனின் நீதி இலாகாவில் அநீதி தாண்டவமாடின. நிரபராதிகளின் கண்ணீர் நீலிக் கண்ணீராகவே கருதப்பட்டது. குற்றம் செய்யாதவர்களின் குரல் வளைகள் நெறிக்கப்பட்டன. இந்த அக்ரமத்திற்கு ஒருமுடிவு கட்ட ஆசைப்பட்டான் லாபுஸியர். அவனுடைய சிந்தனைச் சக்கரம் சுழன்றது.

பலமுறை சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தான். அன்று முதல் அந்த முறையை- அவன் கையாள நினைத்த சூழ்ச்சியை அவன் மேற்கொண்டான். லாபுஸியரின் சூழ்ச்சியை கண்டு கொள்ளக்கூடிய அறிவும் ஆற்றலும் அந்த நீதியிலாகாவில் யாருக்குமே இல்லை என்பதை லாபுஸியர் நன்கு அறிந்து கொண்டான்.

டெல்டூர்—வில்—நீ — பெரிய புரட்சிக்காரன்-லாபுஸியரின் உயிர்த் தோழன்! அன்று அவனுடைய வழக்கு விசாரணை. தூக்கு மேடை நாக்கு தட்டிய வண்ணமிருந்தது. கொலைஞர்கள் கொலைவாளைத் தீட்டினர்கள். டெல்டூர்-வில்நீ யைத்தொலைத்து விட்டால் புரட்சிக்காரர்களின் அட்டகாசம் ஓரளவு குறையும் என்று எண்ணினர்கள் அரசாங்க அதிகாரிகள், பிரபல புரட்சிக்காரன் டெல்டூர் வில்-நீ இன்று தூக்குமேடையேறிவிடுவான் என்று பணக்காரர்கள் ஆனந்த ஆரவாரம் செய்தனர். ஆனல் அடிவயிற்றில் நெருப்பிட்டதைப்போல “வில்-நீ விடுதலை!” என்று தீர்ப்பளித்துவிட்டது லூயிமன்னனின் நீதி இலாகா. லாபுஸியர் அடிமை வேலைக்குப் போய் விட்டான். துரோகி அவன், என்று ஆர்பரித்தஅவசர புத்திக்காரர்கள் அப்பொழுதுதான் உணர்ந்தார்கள்.

ஆம்; டெல் டூர் வில் நீ - மீது சுமததப்பட்டிருந்த கொலைக் குற்றப்பத்திரிகையை யாருக்கும் தெரியாமல் லூவார் நதியில் வீசி விட்டான் லாபுஸியர். இலாகா டெல்-டூர்-வில்-நீ மீது சாட்டப்பட்ட குற்றங்களுக்கு ஆதாரமில்லையென்று கூறி அவரை விடுதலை செய்து விட்டது.

லாபுஸியரின் இந்த சூழ்ச்சியை ஒருசில ஐந்தாம்படைக்காரர்கள் லூயி மன்னனுக்கு சொல்லி விட்டார்கள். கோமாளிப் பயலைத் தூக்கிலிட வேண்டுமென்று கொக்கரித்தனர் கோலாகல வாழ்வு நடத்தினேர். “துரோகி” என்று தூற்றினர்கள் லூயி மன்னனின் பாதந்தாங்கிகள். மன்னன் மனம் பொங்கியது, “மாபாதகனை மரணமேடையில் ஏற்றுங்கள்!” என்று ஆணையிட்டான். கொலையாளிகள் வலை போட்டுத் தேடினர்கள் கூத்தாடியை! லாபுஸியர் அகப்படவில்லை. அவன், ஒரு தனவந்தனைப்போல வேடமிட்டு மீதமுள்ள குற்றப் பத்திரிகைகளை அள்ளிக்கொண்டு ஓடிவிட்டான்,

இந்தச் செய்தி எப்படியோ பாஸ்டில் சிறையிலுள்ள கைதிகளுக்கு எட்டிவிட்டது.

‘வாழ்க லாபுஸியர்! வாழ்க லாபுஸீயர்!” என்று முழக்கமிட்டனர். சிறை அதிகாரிகள் அடக்குமுறையைக் கையாண்டார்கள். “சாது மிரண்டால் காடுகொள்ளாது” என்பார்கள் அதுபோல கைதிகளின் கண்களில் தீப்பொறி பறக்க ஆரம்பித்தது. கட்டுக் கடங்காத ஆவேசம் அவர்களது கைகளை இரும்புக் கரங்களாக்கியது. சிறைக் கதவுகள் நொறுங்கின. மதில்கள் மடமடவென்று சாய்ந்தன. “ஒழிக முடியரசு” என்ற அவர்களது இதயகீதம்—இலட்சிய முழக்கம் வானைப் பிளந்தது. மன்னன் லூயியை மக்கள் மன்றத்தின் நடுவேவிட்டு மானபங்கம் செய்யவேண்டுமென்பதையேகுறிக்கோளாகக் கொண்டிருந்ததா லா-பாயட் என்ற இளைஞன் ஓடிவந்து லூயி மன்னனைக் கைது செய்தான். பிரான்ஸ் நாடு ரணகளமானது. இந்தக் [illegible]ட்சியை லாபுஸியர் பார்க்க [illegible]டியவில்லையே என்று சிலர் [illegible]ருந்தினர்.

அன்று ஒரு நாடகம் [illegible] கேற்று விழா! ஏராளமான [illegible]டம் நாடகத்திற்கு கூடி[illegible]ருந்தது. நாடகம் தொடங்[illegible]; கோமாளி வந்தான்.

“லாபுஸியர்! லாபுஸி[illegible]ர்!” என்ற பேரொலி கிளம்[illegible]யது. ஆம். அந்த நாடகத்தில் லாபுஸியர் முக்கிய பாகம் [illegible]தாங்கி நடித்தான். லாபுஸியர் [illegible]

(10-ம் பக்கம்)

# இராமன் காடேகியது ஏன்?

## ரிஷியின் சாபமா? கைகேயி கோபமா?

பரதன் நாடாள வேண்டும்—ராமன் காடு செல்ல வேண்டும் என்று உறுதியாகக் கூறுகிருள் கைகேயி.

கேகய மன்னனுக்கு தசரதன் அளித்த வாக்குறுதியை நினைவுறுத்தித்தான் கைகேயி அத்தகைய வாசகத்தை வீசுகிருள், கேகயனுக்குத் தந்த வாக்குப்படி பரதன் நாடுபெற வேண்டியது நியாயம்தான்;

ஆனல் ராமன் காடுசெல்ல வேண்டுமென்பது அநியாயமல்லவா என்று கேட்கத் தோன்றும். கைகேயியின் பக்கமும் நின்று வாதிட்டுப் பார்த்தால் அவள் நிபந்தனையிலும் நியாயமிருப்பது நன்ருகத் தெரியும், பரதனைப் பாட்டன் வீட்டுக்கு அனுப்பி விட்டு யாருக்கும் தெரியாமல் சதிசெய்து முடிசூட்டிக் கொள்ள ராமன் தயாராயிருந்தான் என்று கேள்விப்படும் போது கைகேயிக்கு ஆத்திரம் பொங்காதா? கைகேயி ராமனிடம் ஆரம்ப முதல் பொருமை உள்ளவள் அல்ல! அன்புடன் அவனை நேசிப்பவள். ஆச்சாரியாரும் அதை எழுதியிருக்கிருர். அப்படிப்பட்ட கைகேயி ராமன் மீது கோபங்கொண்டு காடேகச் சொன்ன காரணம் என்ன? தன்மகனை வஞ்சிக்க ராமனும் உடன்பட்டான் என்ற செய்தி எந்தத்தாயாரைத்தான் கொதிப்படையச் செய்யாது! நாம், கைகேயி நல்லவள் என்று நிரூபிப்பதற்காக இந்த ஆதாரங்களை கண்டுபிடிக்க வில்லை. ராமாயணக் கதையில் அமைக்கப் பட்டுள்ள கைகேயி பாத்திரம், முன்னுக்குப்பின் முரண்படுவானேன்—மூளி அலங்காரி பட்டியலிலே சேர்க்கப்படுவானேன் — என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிருேம். ராமனிடத்திலே கைகேயி எது பற்றி பேசியிருக்கவேண்டும்?

ராமன் கடவுள் அவதாரமல்ல—பெரியவீரன் மட்டுமே—என்று எழுதியிருக்கிருரே ஆச்சாரியார். அத்தகைய ராமனைப் பாத்திரமாகக் கொண்ட ராமாயணக் கதையிலே வரும் கைகேயி பாத்திரம், ராமனிடத்திலே எப்படிப் பேசியிருக்க வேண்டும்? அப்படிப் பேச வைத்தார்களா - வால்மீகியோ? அல்லது கம்பரோ? — அல்லது இந்த பிராமணவம்பரோ? இல்லை!

"ராமனே! உன் தந்தை என் தந்தைக்குத் தந்த வாக்குறுதி என் மகனுக்குப் பட்டம் தருவது என்பது! அதை இப்போது மீறுகிருர்—மீறுவது மட்டுமல்ல; சூழ்ச்சியாக என் மகனை பாட்டன் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அவனுக்குத் தெரியாமலே உனக்குப் பட்டம் கட்ட முனைகிருர்! இது நியாயமா? நியாயமென்று கருதித்தானே, நீயும் இந்த சூழ்ச்சிக்கு உடன் பட்டாய்? என்தந்தை கேகயராசருக்கு கொடுத்த சத்தியத்தை தசரதர் மீறுகிருர்- ஆகவே தசரதர் எனக்கு கொடுத்த இரண்டு வரங்களைப் பயன்படுத்தி, இப்போது என் காரியத்தை வெற்றிகரமாக சாதித்துக் கொள்கிறேன்! — சூழ்ச்சி வெல்லாது என்பதை எடுத்துக் காட்டுகிறேன்!"


இப்படித்தானே கைகேயி ராமனிடம் பேசியிருக்க வேண்டும்! இது போலத்தானே கதையிலே கைகேயி பாத்திரம் அமைக்கப் பட்டிருக்கிறது. தசரதன் கேகயனுக்கு தந்த வாக்கையும் குறிப்பிட்டு, பரதனை தந்திரமாகப் பாட்டன் வீட்டுக்கு அனுப்பியதையும் குறிப்பிட்டு, அவன் அறியாமலே ராஜ்யாபிஷேகம் ராமனுக்கு செய்துவிட முயற்சித்ததையும் குறிப்பிட்டு, கடைசியில் கைகேயியின் சம்பாஷணையை மட்டும் வேறு கோணத்திற்குத் திருப்பிக் கொண்டு போவானேன்? தசரதனை நல்லவன் என்று காட்டவா? அல்லது, கைகேயி கொடியவள் என்றுசொல்லவா? அல்லது மூலக்கதை ஆசிரியருக்கு பாத்திரம் அமைக்கும் திறமை கிடையாது என்பதை ஆச்சாரியார் ஒத்துக் கொள்கிருரா?

ராமன் காடேகத் தீர்மானிக்கிருன், இந்த சோகக் கட்டத்தின் சிறப்புகளை ஆச்சாரியார் அள்ளி இறைக்கிருர். இறைக்கும் வேகத்தில் ராமாயணத்தின் பெருமையையும் சுருக்கமாக குறிப்பிடுகிருர்;

"எந்த இடத்திலும் எங்கேயாயினும் ராமாயணக்கதையை யாரேனும் சொன்ஞல் அவ்விடம் "பாஸ்பவாரி பரிபூரண லோசனத்துடன் கண்களிலிருந்து நீர் பெருக ஆஞ்சநேயர் கை கூப்பி நின்று கேட்டுக் கொண்டிருப்பார் என்று பெரியோர்கள் சொல்வதின் கருத்து இதுவே."

ஆச்சாரியார் எழுதுகிருர் இப்படி - அது என்னவோ உண்மைதான்! மறைந்திருந்து ஆஞ்சனேயர் கேட்கிருரோ என்னவோ; நிஜ ஆஞ்சனேயர்கள் பலர்—இனத்தை எதிரியிடம் காட்டிக் கொடுக்கும் ஆஞ்சனேயர்கள் பலர்—ஆச்சாரியார் போன்றவர்கள் — ராமாயணக்கதை சொல்லும் போது, கண்ணீர் பெருக கைகூப்பி நின்று கேட்டுக் கொண்டிருக்கிருர்கள் என்பதையாரும் மறுக்க முடியாது!

சூழ்ச்சியால் நாடு கவர எண்ணினுர்கள் தந்தையும் மகனும்! அதை எதிர்த்து ஒரு பெண்மணி போரிட்டாள் — தன்மகனுக்கு பட்டம் கிடைக்குமென்ற ஒரே நம்பிக்கையிலே தான் வயதான கிழராஜனையும் மணந்து கொள்ள சம்மதித்தாள்—தன் எழில் மிகுந்த பருவத்தையே கிழவனின் பலிபீடத்திலே வைக்கத் தயாரான அந்தப் பெண்மணி—எதற்காக அந்த இளமை தியாகத்தை ஏற்றுக் கொண்டாளோ அது நிறை வேறவில்லை என்கிற போது, ஆத்திர மடைவதிலே என்ன தவறு? அந்த ஆத்திரத்திலேதான் அயோத்தி பரதனுக்கு—ஆரண்யம் ராமனுக்கு—என்று ஆணையிட்டாள்—இது சோகக் கட்டமாக நமக்குத் தெரியவில்லை — சூதர்கள் வீழ்ந்துபோன மகிழ்ச்சிக் கட்டமாகவே தெரிகிறது.




காடேகும்ராமன் தாயிடமும் சீதையிடமும் விடைபெற்றுக் கொள்கிருன். லக்ஷமணனும் அவன்கூடப் புறப்படுகிருன். சீதையும் ராமனுடன் கிளம்புகிருள்.

"உம்மைவிட்டு எப்படிப் பிரிந்திருப்பேன்?" என்று அழுகிருள். சீதை ராமனிடத்திலே மிகுந்த அன்பு கொண்டவள் ஆகவே அழுதாள் என்று நாம் விட்டு விட்டுப் போக முடியவில்லை. சீதையின் அன்பிலும் களங்கம் காணக் கிடக்கிறது, படியுங்கள் அதை! ஆச்சாரியாரே எழுதியிருக்கிருர்—செப்டம்பர் 19 நாள் இதழில்!

ராமப்ரபூ! உம்மோடு வனத்தில் வாழ்வதே எனக்கு இன்பம்—அதுவே எனக்கு வாழ்வு—

என்றெல்லாம் சீதை சொல்லுகிருள் – சொல்லட்டும்—ஆனல் அவள் கணவனிடம் கடைசியாகச் சொன்னதை நினைத்தாலே சிரிப்பு வருகிறது.

"நான் மிதிலையில் இருந்த காலத்தில் பிராமணர்களும், ஜோதிஷர்களும், இவளுக்கு வனவாசப்பிராப்தி என்று என்னைக்குறித்து என் தாயிடம் சொல்லியிருக்கிருர்கள், நான் தனியாக வனவாசம் செய்ய முடியுமா? உம்முடன் சேர்ந்து வனவாசம் செய்துவிட்டு, எப்படியும் நடக்க வேண்டிய அந்த நிகழ்ச்சியை சுகமாக முடித்து விடுவதற்கு இதுவே சமயம்."

சீதை சொன்னுளாம் இதுபோல! —எப்படியும் நடந்து தீரவேண்டிய பிராப்த விஷயத்தை இந்தசமயத்தில் உன்னேடு சேர்ந்து அனுபவித்து விடுகிறேன் என்றுமனைவி கூறுகிருள் என்ருல், அவளுக்கு சுயநலத்தை தவிர வேறென்ன தலைதூக்கியிருக்கிறது என்பதை ஆச்சாரியார்தான் கூற வேண்டும்.

சீதையின் சுயநலம் ஒருபுறம் இருக்கட்டும்;ராமன் வனவாசம் போவதற்கு கைகேயி காரணமல்ல; சீதையின் ஜாதக விசேஷம் தான் காரணம் என்பதாவது ஆச்சாரியாரால் ஒத்துக் கொள்ளப்படுமா? ரிஷியின் சாபம் ஒன்ருல், தசரதனுக்கு புத்திரப்பிரிவு ஏற்பட்டதாக ஆச்சாரியார் கூறியிருக்கிருர். ஆகவே—ராமன் காடு சென்றது; சீதையின் ஜாதகத்தாலா? ரிஷியின் சாபத்தாலா? கைகேயியின் கோபத்தாலா? அல்லது விதியின் வலிமையாலா?

விதியின் வலிமை என்ருல், கைகேயியை திட்டுவது நேர்மையாகாது – நாணயமாகாது! சீதை லட்சுமியின் அவதாரம் என்கிருர் ஆச்சாரியார் ஓரிடத்தில்!—

லட்சுமி அடியெடுத்து வைத்தஅயோத்தியிலே அனர்த்தங்கள் அமோகமாக விளைகின்றன.

மணமகள், வீட்டுக்கு வந்து ஏதாவது துன்பம் ஏற்பட்டால் "மூதேவி அடி எடுத்து வைத்த நேரம் அப்படி!" என்று முணுமுணுக்கிருர்கள்; ஆச்சாரியார் உட்பட—அனைவருமே!

ஆனல் இந்த சீதை அடி எடுத்து வைத்த அரண்மனையில் அறுபதாயிரம் வருஷம் வாழ்ந்த தசரதன் சாகநேரிடுகிறது—ராமன் காடேக நேருகிறது—அயோத்தியே சோகக் காடாகப் போகிறது! —மகாலட்சுமி அவதாரமாம் அவள்! மூதேவிதான் இவளும் என்று கூறினல் முட்ட வருகிருர்கள்.

சக்கரவர்த்தி திருமகன்மூலம் பழமைக்கு சப்பைக்கட்டு போடும் ஆச்சாரியார்விடும் சரடுகள் ஒருபுறமிருந்தாலும்—

[10-ம் பக்கம்]




## நடுக்கடலில் !

### 7

கள்ளத்தோணிகள் இலங்கைக் கரையை அடைய வேண்டுமென்றால் அதற்கு நல்ல நேரம் இரவுதான். மனோராவிலிருந்து இலங்கைக் கரையோரம் ஏறத்தாழ நாற்பது மைல்கள் இருக்கலாம். காற்று சாதகமாக வீசினால் இரண்டு மணி நேரத்தில் கரை போய்ச் சேர்ந்துவிடமுடியும். இல்லையேல் காற்றை அனுசரித்து தாமதமாகத்தான் போய்ச் சேரமுடியும். மாயாண்டிக்கிழவர் பிரயாணம் செய்த கள்ளத் தோணிக்கு காற்றின் உதவி கிடைக்கவில்லை. பொழுது விடிவதற்குள் எப்படியும் கரை போய்ச் சேர்ந்து விடவேண்டும் என்று ஐயப்பன் மிகவும் கஷ்டப்பட்டான். படகிலுள்ள ஆட்கள்மீதெல்லாம் பாய்ந்து விழுந்தான். இயற்கையான பயங்கரக் குரலில் கத்தினன். எவ்வளவுதான் அவன் அலட்டிக்கொண்டும் கூட தோணி வேகமாகச் செல்ல முடியவில்லை. கிழக்கு நோக்கிச் செல்லவேண்டிய தோணி காற்றை எதிர்த்து கடலைக் கிழித்து வேகமாகப் போவதென்றால் சாமான்யமா ?

இருட்டோடு இலங்கைக் கரையை அடைய முடியாதென்று ஐயப்பன் முடிவு கட்டிவிட்டான். உடனே ஆட்களிடம் அவசர உத்திரவு போட்டான்.

"டேய்-பசங்களா! இனிமே உங்க ஜம்பம், சாயாது! மரியாதையா இங்கேயே தோணியை நிறுத்திப் போடுங்க-இருட்டினவுடனே புறப்படலாம்-"

என்று கத்தினன். ஐயப்பனின் சொற்படியே தோணி நிறுத்தப்பட்டது.

"இங்கிருந்து எத்தனை மைலப்பா இருக்கும்?" என்று மாயாண்டிக் கிழவர் கேட்டார்.

"பத்து மைல் இருக்கும்-ஏன்? நீஞ்சிப் போகலாமென்று பார்க்கிறீரா?" என்று சிரித்தான் ஐயப்பன்.

"நீந்திப்போக என் உடலிலே வலுவேது? நீ வேண்டுமென்றால் நீந்தியும் போவாய்—தாண்டியும் போவாய்? என்னால் முடியுமா?"

"குறும்புக்காரக் கிழவா! இந்தா—இதைச் சாப்பிடும்-"

என்று ஒரு மூட்டையைப் பிரித்தான் ஐயப்பன். அதில் கட்டுச்சோறும், வறுத்த கருவாடும் இருந்தது.

"அருமையான கருவாடு! பார்த்தீரா ஜம்முன்னு வாசிக்குது! வாசனையை புடிச்சிக்கிட்டே இந்த சோத்தை கொஞ்சம் வயத்திலே தள்ளும்-உம்!" என்று கிழவரிடம் நீட்டினன்.

பசியோடிருந்த கிழவரும், சாப்பிடத்துவங்கினர்.

தோணியிலிருந்த ஆட்களும் தங்கள் வயிற்றை நிரப்பும் கடமையில் துரிதமாக ஈடுபட்டார்கள். தோணி நடுக்கடலில் நிறுத்தப்பட்டு, கடல் அலைகளின் மோதுதலால் ஊஞ்சல் போல ஆடிக்கொண்டிருந்தது. ஐயப்பன் வயிறு புடைக்க சாப்பிட்டு விட்டு ஒரு பெரிய ஏப்பம் விட்டான்.

அந்த ஏப்பம் வெளிப்படும்போதுகூட அவனது கூரிய பார்வை மாயாண்டிக் கிழவரின் மடியிலேயே இருந்தது. கொல்லர் வீட்டுப் பெண் கடலிலே கவிழ்ந்த கதையைச் சொல்லும்போது, மாயாண்டிக் கிழவர் அவரையுமறியாமல் தன் மடியைத் தடவிப் பார்த்துக்கொண்டார், அதை கவனித்துவிட்ட ஐயப்பன், எப்படியும் கிழவரின் மடியிலுள்ளது என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டுமென்று துடித்தான். ஏதோ ஒரு ஆவல் அவனைத் தூண்டியபடியிருந்தது. அந்தப் பொருளின் மீது அவனுக்கு சந்தேகம் ஏற்பட்டுவிட்ட காரணத்தால் "என்னய்யா மடியிலே?" என்று திடீரெனக் கேட்பதற்கு அவன் மிகவும் தயங்கினன். ஒருவாறு தன்னை சமாளித்துக் கொண்டு, தந்திரமாகப் பேச்சுக் கொடுத்தான். அப்போதும் அவனையறியாமல் அவன் முகத்தில் அவனைக் காட்டிக் கொடுக்கும் அசடு வழிந்தது

"மாயண்டி — வெத்திலை பாக்கு கொடுமய்யா!"

"என்னிடம் ஏது, வெற்றிலை பாக்கு!"

"மடியிலே வைத்திருக்கிறீரே?"

" அது வெற்றிலைபாக்கு அல்ல!"

"பிறகென்னவாம்? எங்கே பார்ப்போம்!"

என்று மடியைத் தொடப் போனான் ஐயப்பன், அதற்குள் கிழவர் சமாளித்துக் கொண்டு " ஐயப்பா! அதெல்லாம்—கை நீட்டுகிற வேலை வைத்துக் கொள்ளாதே — உனக்கு வேண்டியது வெற்றிலை பாக்குத்தானே — அது என்னிடமில்லை — அதோடு விட்டு விடு!"

"ஏன் உம்மிடம் கை நீட்டக் கூடாதா?"

"ஐயப்பா—உன்னோடு நான் சமமாகப் பழ்குவதை நீ தப்பாக எடுத்துக் கொண்டால் எனக்கு கோபம் வரும், அவ்வளவு தான் சொல்வேன்,"

"அட பெரிமனுஷா? என்னோடசமமாகப் பழகினதாலே என்னய்யா வந்துட்டு

## இது வரையில்....

★

வெள்ளியம்பலம் மருங்கப் பள்ளத்தில் ஒரு பெரிய புள்ளி—பணபலத்திலல்ல, படை பலத்தில். அந்த ஊர் சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் எங்கேயோ ஓர் இடத்தில் புதைந்து கிடக்கும் பொன் குவியல்களை தோண்டி எடுக்கும் முயற்சி பல நாளாக நடந்து வருகிறது. அப்படி ஒருநாள் ஜோசியரிடம் நல்ல நாள் பார்த்து இருட்டில் குறிப்பிட்ட இடத்தில் தோண்டிப் பார்க்கச் செல்லும்போது கோயிலுக்குப் பின் புறத்தில் இரு காதலர்களின் உரையாடல்கேட்கிறது. துரையும்—பரிமளமும்தான் அவர்கள்...துரை, பரிமளத்திடம் 'அதோ அந்த மாமரத்தடிதான் தங்கத்தைப் புதைத்த இடம்?' என்று சொல்லுகிறான்—அந்தவாக்கியம் காதிலே விழுந்ததும் 'எது தங்கத்தைப் புதைத்த இடம்?' என்று ஆவலுடன் அவர்களிடம் வெள்ளியம்பலம் ஓடுகிறார். திடுக்கிட்ட காதலர்கள் அங்கிருந்து ஓடுகிறார்கள்—சில மைல்தூரம் ஓடி வெள்ளியம்பலத்தின் ஆட்களிடமிருந்து தப்பி கடற்கரையில் வானளாவ நிற்கும் மனோரா பக்கம் போகிறார்கள்—ஓடுகையில் துரை விட்டுச் சென்ற ஒரு செருப்பையும் பரிமளாவின் மேலங்கியையும் வெள்ளியம்பலம் எடுத்துச் செல்கிறார்—மனோரா பக்கம் சென்ற காதலர்கள் மாயாண்டிக் கிழவர் செய்யும் பிரார்த்தனையைக் கேட்கிறார்கள். கிழவர் கள்ளத் தோணியில் போவதற்கு காதலர்கள் தடையாக இருந்து விடுவார்கள் என்று பயந்து அவர்களை அடித்து, கட்டிப் போட்டு மயக்கமுறச் செய்து, தான் தந்த அந்தத் துன்பத்திற்கு விளக்கமும் கொடுத்து விட்டு, கள்ளத்தோணியில் ஏறிக்கொள்கிறார் அவருடைய மடியில் ஒரு சிறு முடிச்சும் தாள் உறையும் இருக்கிறது. பரிமளா துரையிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்புகிறாள் — பின்னிருட்டு—படகு கடலில் போய்க் கொண்டிருந்தது. படகிலே வேறொரு கிழவர்—பெயர் ஐயப்பன் மாயாண்டிக் கிழவனும் ஐயப்பக் கிழவனும் பேச்சை வளர்த்துக் கொண்டு போகிறார்கள். பொன்கிட்டத்திற்கு ஆசைப்பட்டு கொல்லர் குடும்பம் கொலையுண்ட கதையை மாயாண்டிக் கிழவன் ஐயப்பக் கிழவனிடம் சொல்லுகிறார்... படகு போய்க் கெண்டிருக்கிறது.

வீடு சேர்ந்த பரிமளா தன்னை ஒரு மோகினிப் பிசாசு தூக்கிப்போய் விட்டதாகச் சொல்லுகிறாள்—மகள் மேலுள்ள பாசத்தால் தாயார் அஞ்சலைநம்புகிறாள் தந்தைதாண்டவன்நம்பவில்லை. மகள்மீது அவநம்பிக்கை ஏற்படுகிறது அவருக்கு. தெருவில் போய்க் கொண்டிருந்த வெள்ளியம்பலம் கூச்சல் கேட்டு தாண்டவன் வீடுவந்து செய்தியை விசாரிக்கிறார். தன்மகளை மோகினிப் பிசாசு தூக்கிக்கொண்டு சென்றிருந்தால் தூக்கிச் சென்ற இடத்தில் ஒரு அடையாளம் கேட்கிறார். போய்ப் பார்த்ததில் பரிமளா சொன்ன அடையாளம் சரியாக இருக்கிறது. ஆனல் அந்த இடத்தில் ஒற்றை மிதிபடி ஒன்று கிடந்தது. தாணடவனுக்கு ஐயம் நீங்கவில்லை.

வெள்ளியம்பலத்திற்கு ஒரு சந்தேகம். கடந்த இரவு தான் கண்ட காதல் ஜோடிகள் பரிமளாவும் அவன் காதலனும் தானே என நினைக்கிறார். புதையல் ரகசியமறிய துடிக்கிறார்.

உமக்கு! கை நீட்டித் தொடக் கூடாதாமே இவரை! செத்து சமுத்திரத்திலே விழுந்தீர்ை அப்ப யாரயா — உம்மைத் தொட்டுத் தூக்குவாங்க? உறவு முறைஜாதி சொந்தம், பிள்ளை குட்டி ஏராளமில்ல இவருக்கு!''

''பிள்ளை குட்டி—உறவு முறை, இல்லாவிட்டால் என்ன? சாகும்போது அழுவதற்காக ஜாதி, சொந்தம்; பிள்ளைக்குட்டிகள் எல்லாம் வேண்டுமா என்ன? உலகம் தோன்றிய நாளாய், மனிதர்கள் ஒருவர்பின் ஒருவர் அழுது கொண்டே தான் போய்க் கொண்டிருக்கிருர்கள்- என்னுடைய சாவில் இந்த சம்பிரதாயமும் இல்லாமல் ஒழியட்டுமே''

''ஓய்! வேதாந்தி - பேச்சை ஏன் நீட்டுகிறீர்? மடியிலே என்னய்யா கனம்? சொல்லும் என்ருல்...''

''சொல்லத் தேவையுமில்லை—நீ கேட்க வேண்டிய அவசியமுமில்லை-''

''வெட்டு ஒண்ணு - துண்டு ரெண்டா பேசுகிறீரே!''

''அதுபோல அவசியம் ஏற்படுகிறது! பேசுகிறேன்!''

ஐயப்பன், அதற்கு மேலும் கிழவரிடம் கிளறிக் கேட்க விரும்ப வில்லை. ஆனால் ஏதோ ஒரு முக்கியமான பொருள் மட்டும், அவர் மடியில் இருக்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டான். மாயாண்டி தன் ...து சந்தேகப்பட்டு விடக் ...டாதே என்பதற்காக பேச்சையும் மாற்றினன்.

''உம்-ராத்திரி பத்து மணி ...ரையிலே இங்கேயே ...டக்க வேண்டியது தான்!''

''அய்யோ—அவ்வளவு ...ரமா?'' என்ருர் கிழவர்.

''ஆமாம்—நடு ஜாமத்திலே ...ரைக்குப் போனுத்தானே; ...ர் கண்ணிலும் படாம ...றங்க முடியும்—''

என்று சொல்லிக்கொண்டே ...வங்காய மூட்டையின் மீது ...ய்ந்து கொண்டான் ஐயப் ...ன். மாயாண்டிக் கிழவரும் ...ந்தனையில் ஆழ்ந்தார். கதிரவ ...ன் வெம்மை அவரைக் கஷ் ...டப்படுத்திய போதிலும், அவர் ...தைப் பொருட்படுத்தாதது ...ால காட்டிக்கொண்டார். ...ாணியிலுள்ள மற்ற ஆட் ...ளும் மூட்டைகளில் சாய்ந்து ...ண்டார்கள்— எல்லோரும் ...ப்பாறத் துவங்கியதைக் ...ட ஐயப்பன் ஆத்திரத் ...ாடு,

''டேடே! எல்லாரும் ...ண்டு போய்ட்டா என் ...ா ஆகிறது! சுற்றியும் ...த்தியும் பாக்கிறத்துக்கு ...த்தனுவது எழுந்திரிச்சு ...காருங்கடா!'' என்று கத் ...ன்,

''நான் பார்த்துக் கொள் ...றன்—நான் படுக்கமாட்டேன்—பயப்படாதே ஐயப்பா!'' என்று கிழவர் கூறினர். ஐயப்பன் மீண்டும் மூட்டையில் சாய்ந்து கொண்டான். அவனுடைய சிந்தனையெல்லாம் மாயாண்டிக் கிழவரின் மடியிலேயுள்ள பொருளைப் பற்றியே சுழன்று கொண்டிருந்தது,

மாயாண்டிக் கிழவரின் எண்ணமோ, முதல் நாள் இரவு தான் சந்தித்த அந்தக் காதலர்களின் மீது வட்டமிட்டது.

**கருணாநிதி**

குறிக்கோளற்ற தனது பயணத்தின் குறுக்கே சந்திக்க நேரிட்ட அந்த காதல் புருக்களுக்கு இடையூறு விளைவிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டதை நினைத்து நினைத்து கிழவர் பெருமூச்சு விட்டுக்கொண்டார். அன்றைய பகல்பொழுது முழுதும்—நடுக்கடலிலே, சிந்தனையிலும் பெருமூச்சிலுமாகக் கழிந்தது அவருக்கு!

## இரவு வந்தது

இரவு வந்தது—மருங்கப்பள்ளம் கிராமம் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தது, அந்த அமைதி நிறைந்த இரவில் தன் கண்கள் மட்டுமே மூடாமல் கிடக்கின்றன என்று பரிமளா நினைத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். அவள் விஷயமாக அன்றிரவு, பலகண்கள் மருங்கப்பள்ளத்தில் விழித்திருந்தன என்பது அவளுக்கு அப்போது தெரியாது. அவள் வீட்டிலேயே இரண்டு கண்கள் அவளையறியாமல் பயங்கரமாக மின்னிக்கொண்டிருந்தன. பரிமளா, தன்னுடைய எதிர் காலம் எப்படி எப்படி சிக்கல் நிறைந்ததாகமாறுமோஎன்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள். அவளுடைய எதிர் காலத்தைப் பற்றி ஒரு நல்ல முடிவு செய்து விட்டதாக உறுமிக் கொண்டிருந்தார் தாண்டவன். பரிமளாவின் தாய் அஞ்சலை, நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தாள். தாண்டவனுக்கு நிச்சயமாகப் புரிந்து விட்டது, தன்மகள் கெட்டு விட்டாள் என்று! யாரோ ஒரு பயலுடன் தன் குமாரி, சகவாசம் வைத்துக் கொண்டு, குடும்பத்து மானத்தைப் போக்கி விட்டாள்; இதை வளர விடாமல் தடுக்க, அவளைக் கொன்று விடுவது தான் நல்லது என்று தீர்மானித்தார் தாண்டவன், பக்கத்திலே கிடக்கிறது பளபளப்பான கத்தி! அதைக் கையிலே எடுத்துக் கொண்டார். பளிங்குச் சிலை போன்ற பரிமளாவை கண்ட துண்டமாக்கிவிட எழுந்தார். தந்தை-மகள்-என்ற அந்த ரத்த பாசம், எங்கு தான் போய் மறைந்து கொண்டதோ தெரியவில்லை. ரத்த பாசத்தைவிட சிறந்த பாசமில்லை என்பர்—அது தாண்டவன் விஷயத்தில் பொய்யாகவே போய் விட்டதா? ஆம்—அப்படித் தான்! அதைத்தான் அந்தக் கத்தியின் பளபளப்பு சொல்லிக் காட்டியது.

பரிமளா படுத்திருக்கும் அறைக்கு அருகே தாண்டவன் கத்தியுடன் வந்துவிட்டார்-ஒரு விநாடி; பரிமளாவின் அழகான உடல் துண்டாடப் பட்டுவிடும்!

தாண்டவனின் உடல் வியர்வைக் குளமாகி விட்டது, கத்தியை சரியாகக் கையிலே பிடித்துக் கொண்டார்.

பரிமளா படுத்திருக்கும் அறைக்குள்ளேகாலடி எடுத்து வைத்தார். உள்ளே நுழைய வேண்டும்-ஒரே வெட்டு—கொலை-மனம் நிம்மதியாகிவிடும் இதுதான் தாண்டவனின் முடிவு!—ஓங்கிய கத்தியுடன் உள்ளே நுழைந்தார் தாண்டவன்—ஆனல் அவர் அங்கே என்ன கண்டார்?

பரிமளாவை யாரோ சிலர் கட்டித் தூக்கிக் கொண்டிருந்தார்கள் தாண்டவன் உள்ளே நுழைந்ததைப் பார்த்த அவர்கள், அவர் மீது ஒரே பாய்ச்சலாசப் பாய்ந்து, அவர் வாயையும், கால் கைகளையும் கட்டிப் போட்டு விட்டார்கள்—பரிமளாவுக்கும் பேச முடியாதபடி வாயிலே கட்டு! ஒரு முரட்டுக் கிழவன், பரிமளாவை தன் தோளிலே தூக்கிக் கொண்டு ஓடினன்-இந்த சந்தடியில் விழித்துக்கொண்ட அஞ்சலை அலறி அடித்து எழுந்து வருவதற்குள், பரிமளாவுடன் முரடர்கள் ஓடி விட்டார்கள்—அஞ்சலை, அவசர அவசரமாக, கணவனை அவிழ்த்து விட்டாள். தாண்டவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''என்னுங்க இது! எங்கே பரிமளம்?''

தாண்டவன் பதில் பேசவில்லை.

''மறுபடியும் மோகினிப் பிசாசு தூக்கிட்டுப் போயிட்டுதா?'' என்று அலறினள் அஞ்சலை!

''சீ! சும்மாகிட—'' என்று அதட்டினர் தாண்டவன்.

[வளரும்]


# நல்ல தீர்ப்பு வழங்குக!

★

ஜில்லா போர்டு தேர்தல்களில் போட்டி யிடுகிறவர்கள் யார் என்பதை சிறிது சிந்தியுங்கள்!

★

வாக்குறுதியைக் காற்றிலே பறக்கவிட்ட வஞ்சகர்கள், வாய்ஜாலம் பேசிக் கொண்டு வருவார்கள்!

★

பதவி ஆசையால் பச்சோந்திப் பண்பு பெற்ற பாதகர்கள் பாகுமொழி வீசி வருவர்!

★

கட்சி விட்டுக் கட்சி மாறுவதையே ''கண்யம்'' எனக் கொண்ட கயவர் பெருந்தகைகள், கண்ஜாடை காட்டி வருவர்!

★

அவர் ஆதரிக்கிருர்; இவர் ஆதரிக்கிருர் — ஆகவே என்னைத் தேர்ந்தெடுங்கள் — என்று அவுட் வாணங்கள் விடுவோர், ''மக்கள் அப்பாவிகள் எதையும் கேட்பர்'' என்ற மமதை யோடு வருவர்!

★

அந்த ஆள்மயக்கிகள் விஷயத்திலே பொது மக்கள் எச்சரிக்கையா யிருக்க வேண்டுகிருேம்.

# சண்பகமரம் சாய்ந்தது

★

கொக்கரித்துப் பாயட்டும் நமது கத்தி.
கொலைசெய்து பருகட்டும் புதிய ரத்தம்.
தெக்கணத்துச் சிங்கங்காள்! எழுவீர்—என்றோர்
தமிழ்ப்பாடல் படித்துக்கொண் டிருக்கும் போது;
சிக்கிவிட்டாய் மரணத்தின் கரத்தில்—என்ற,
சேதிதனைக் கேட்டவுடன் எனது கண்கள்,
கக்கிவிட்ட கண்ணீரில், மூழ்கி விட்டேன்.
கவிமணியே கனலுக்குள் மூழ்கி விட்டாய்.

முள்ளெடுத்து ஆசிரியர் தடுக்கில் குத்தி
வைத்திட்ட பருவத் திலே துடுக்குப்
பிள்ளைஎனப் பேர்பெற்றாய். மனையாட் டிக்குப்
புருடனெனப் பேர்பெற்றாய். இந்நூற் றாண்டில்;
தென்னாதமிழ்ப் பெருங்கவிஞன் எனும்பேர் பெற்று,
சிலகாலம் நோயாளி யாகி; இன்று
பிள்ளைஇல்லா மனைவிஅழ, பிணம் என் கின்ற,
பேர்பெற்றாய்! பிணமாகாப் புகழைப் பெற்றாய்!

கற்றவனே! மயில்மேயும் மலை நிலத்தின்
கருப்பொருளைப் போன்றவனே! மரணம் வந்து—
விற்றதொரு பொருளைப்போல் எடுத்துக் கொண்டு
ஓடிற்றே, உன்உயிரை! இல்லை நீதான்;
நெற்றாகி விட்டதொரு தேங்காய், ஓர்நாள்
நிச்சயமாய் விழத்தானே வேண்டும்—என்று,
சுற்றத்தார் வாயலற. விழிப்பே இல்லா
தூக்கத்தில் கனவின்பம் காண்கின் றாயோ!

பானைஉடைந் தாலஅந்தப் பானைக் குள்ளே,
பரவியுள்ள காற்றுஅவ் விடத்தை விட்டு,
வான்நோக்கி நகராது. அதனைப் போல,
வைகுந்தம் எவர்மூச்சும் போவ தில்லை.
தேனுக்கு நிகரான தமிழை விட்டு;
சுவைவிட் டு; சுகம்விட்டு; உயிரை விட்டு;
ஏனோசெந் தமிழ்நாட்டை ஏங்க விட்டு;
இடுகாட்டில் வெண்சாம்பல் ஆகி விட்டாய்!

சோலையிலே சஞ்சரிக்கும் குயில்கள்; இன்றோர்,
சண்பகப்பூ மரம்சாய்ந்த தென வருந்தும்.
காலையில்நீ இருந்தாயே! எம்மை எல்லாம்
கைவிட்டு மறைந்தாயே—என்று, செய்யுள்
ஓலையெல்லாம் ஒப்பாரி வைத் திருக்கும்!
வீடெல்லாம், நாடெல்லாம், அழுதி ருக்கும்!
மாலையிலே இறந்தஉன் உடலை வந்து
மொய்த்திருக்கும் ஈகூட அழுதி ருக்கும்!

ஒப்பற்ற ஒருமுத்து, பாண்டி தன்னில்
ஒளிவீச, அம்முத்து போன்ற நீயும்,
அப்பரைப்போல் எண்பத்தோ ராண்டு வாழ்ந்து,
அங்கத்தில் சுருக்கங்கள் தாங்கி னாலும்,
எப்போதும் இப்புவியில் இளமை யோடு
இருக்கின்ற கீர்த்திபெற்றாய். அந்தக் கீர்த்தி,
முப்போதும் தளராது! நிழலுக் கென்றும்
மூப்பு நரை, ஏற்படுவ தில்லை அன்றோ!

வடமொழியில், செந்தமிழில், புலமை மிக்க
மறைமலைக்கும்; அறிஞர்பண் டித மணிக்கும்;
குடங்குடமாய்க் கண்ணீரை வடித்தும்; பின்னர்,
கலைவேந்தர் திரு. வி. க. பெரியா ருக்கு,
மடைதிறந்த வெள்ளத்தை விழியால் தந்தும்;
மனமொடிந்து இருக்கையிலே, நீயும் உந்தன்
கடைமூடிக் கொண்டாயே சரியா? நாஞ்சில்
கவிமணியே! இனிஅசையா மணியே! அந்தோ!




# நிலையும் நினைப்பும்

★

## குலக்கொழுந்தே! குணாளா!

என்று

**வாழ்த்துகிறோம்! வரவேற்கிறோம்!**
**பாராட்டுகிறோம்! பரவசமடைகிறோம்!**

நமது கழகத் தோழர்கள் பலரும்
முதலமைச்சர்
**காமராஜரை**
கொண்டாடுகிறார்கள் குதூகலத்தோடு.

★

## தூத்துக்குடி சதி வழக்கில் நமது தோழர்கள்

வாடி வதங்கி நின்று கொண்டிருக்கிறார்கள்.

1' அவர்களிடம் பரிவுகாட்ட
2. வழக்கை வாபஸ் வாங்க
3. உயிரிழந்த குடும்பத்தாருக்கு கருணை காட்ட
4. கல்லக்குடி வழங்க

**காமராஜரின் மனம்**
**இடந்தர வில்லை**
**இளகவில்லை**

**ஏன்? ஏன்? ஏன்?**

நாம்
கொண்டாடுகிறோம்—அவர் வெற்றி கண்டு.
நாம்
வாழ்த்தி வரவேற்கிறோம் — அவர் செல்லுமிடமெல்லாம்.
அவர்?
வெட்கம் விலாவைக் குத்துகிறது.
வேதனை வெள்ளம் குமுறுகிறது.
வேற்றாரும் கேலி செய்கின்றனர்,


**நேசக்கரம் நீட்டுகிறோம்**
**பாசமும் பரிவும் ஏற்படக் காணோம்!**

★

தூத்துக்குடித் தோழர்களை
வழக்கு வாட்டி வதைக்கிறது!!

—'திராவிட நாடு'






# சிரிப்பூட்டும் சிறு கதைகள்

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

உங்களை இப்படி எல்லாம் அழைப்பதில் எவ்வளவு உண்மை இருக்கிறது தெரியுமா? உங்கள் சிங்கத்தனத்தையும் சூரத்தனத்தையும் எங்களுக்கு வரும் உங்கள் கதைகள் சொல்லுகின்றன. உங்களுடைய பேனாக்களுக்கு மட்டும் வாய் இருந்தால், "என்ன போங்கள் சார்! இந்தப் 'பிறைவான'த்தை ஆரம்பித்தாலும் ஆரம்பித்தீர்கள்; இந்தப் பொடியன்கள் எங்களுக்கு ஓய்வே தருவதில்லை" என்று அழுது கண்ணீர் விட்டிருக்குமோ என்னவோ! அத்தனை கதைகள் வருகின்றன !

இந்த வாரம் அவைகளில் சில சிரிப்பூட்டும் சின்னக் கதைகளைத் தருகிறேன் : படியுங்கள் :

✶ ✶ ✶

### பம்பாய்த் தம்பி கண்ணனின் கதை

'என் நண்பன் ரவி இருக்கிருனே, அவன் ஒரு வேடிக்கையான பையன். அவனுக்கு எதில் ஆசை தெரியுமா? 'கிரிக்கெட்டில்' என்பீர்கள்; 'சினிமாவில்' என்பீர்கள்;'உல்லாசப் பயணத்தில்' என்பீர்கள்; தப்பு! அவை ஒன்றிலும் இல்லை; 'அகிம்சை'யில் தான் அவனுக்கு விருப்பம்! அது தான் அவன் நினைவு—உயிர் எல்லாம்!

வெய்யலில் நாய் நடந்து சென்ருல் அவன் 'அடடா' என்பான்; சூரியனை சபிப்பான். கன்றுக் குட்டியை கயிற்றைக் கட்டி யாராவது இழுத்துச் சென்ருல் 'ஐயோ' என்பான்; இழுத்துச் செல்பவரிடம் சண்டைக்கே போய் விடுவான்!

இவை எல்லாம் பார்த்தால் எனக்கு சிரிப்பு வந்துவிடும். "ரவி! இதெல்லாம் என்ன பைத்தியக்காரத்தனம்?" என்று ஒரு நாள் கேட்டும் விட்டேன்.

ரவிக்குக் கோபம் வந்து விட்டது.

"டேய், கண்ணு! நீ என்பதால் தப்பித்தாய்!...ஆமாம்... இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு வேறு யாராவதாக இருந்தால்...ம்......என்னென்னவோ நடந்திருக்கும்....போகட்டும்.... அகிம்சையைப் பற்றி உனக்கென்னடா தெரியும்?... ஒரு ஈ, எறும்பு, கொசுவுக்குக்கூட நம்மால் கஷ்டம் வரக்கூடாது; தெரிஞ்சுக்கோ!......"

"கொசுவுக்குக் கூடவா?..."

"பின்னே என்னவாம்? கொசுவுக்கு மட்டும் உயிரில்லையா? நான் அகிம்சையே அறம் என்று ஒரு புத்தகம் தருகிறேன், படித்துப்பாரடா முட்டாள்!" என்ருன். புத்தகத்தையும் கொடுத்தான்.

நான் வாங்கினேன்; பிரித்தேன்; புரட்டினேன்; பத்தாவது பக்கத்தைப் பார்த்தேன். அவ்வளவு தான்; 'குபீர்' என்று சிரித்து விட்டேன்.

"ஏன்? எதைக் கண்டுடா சிரிக்கிருய்?" என்ருன் ரவி கோபமாக.

நான் வாயைத் திறக்கவில்லை. புத்தகத்தை மூடாமல் அவனிடம் நீட்டினேன். அவன் பார்த்தான். மறுகணம் "ஐயோ! நான் கொலைகாரனு?" என்று கத்திஞன். தலை குனிந்தான்.

ஏன் தெரியுமா? பத்தாவது பக்கத்தில் ஒரு கொசு நசுங்கிச் செத்திருந்தது. படித்து விட்டு மூடும்போது அந்தப் 'பாவத்'தைச் செய்திருக்கிருன் அந்த 'அகிம்சா ரவி'!

★ ★ ★

### மதுரைத் தம்பி குமாரின் கதை

பக்கத்து வீட்டிலே ஒரு தாத்தா இருந்தார்; அவர் பெயர் சந்தோஷம். அவருடன் நான் பேசுவதேயில்லை. ஏன் தெரியுமா? அவர் பெரிய முன் கோபக்காரர் என்று எல்லோரும் சொன்னார்கள். இருந்தாலும் எனக்கு சந்தேகம்; அவரையே கேட்டுவிட வேண்டுமென்று ஆசை!

ஒரு நாள் அவரிடம் போனேன். "தாத்தா!" என்றேன் மெதுவாக நல்ல பிள்ளையைப் போல.

"ஏன்? என்ன?" என்ருர்.

"ஒரு சந்தேகம்! நீங்கள் பெரிய முன் கோபக்கார..."

"ஆ! என்ன சொன்னுய், பொடிப் பயலே! நான் முன் கோபக்காரனு? யார் சொன்னது? எந்த முட்டாள் சொன்னுன்? அந்த சோம்பேறியை சிண்டைப் பிடித்து இழுத்து வா! அவன் கன்னத்தில் அறைந்து, காலை முறித்து, கையை உடைத்து...அவனை என்னென்ன பாடு படுத்துகிறேன் பார்..."

நான் ஏன் அதற்கு மேல் அங்கே நிற்கப் போகிறேன்! "போய் வருகிறேன், சந்தோஷத் தாத்தா" என்று அவருக்கு வணக்கம் போட்டேன். வீட்டை நோக்கி ஓட்டோடி வந்தேன்.

—சொர்ணம்

## சிறிய வயதிலே

### வீரன் செய்த சபதம்

அந்தத் தம்பி ரொம்ப ரொம்ப நல்லவன்; புத்திசாலி; ஆனல், ரோசக்காரன்! அவனுக்கு ஒரு எதிரி; அவனே மகா முரடன். அந்த முரட்டுச் சிறுவன் காரணமில்லாமல் புத்திசாலி தம்பியுடன் சண்டைக்கு வந்தான். சும்மா இருப்பான அவன்? முரட்டுச் சிறுவன் வீரிட்டு அழும்வரை பதிலுக்கு 'பூசை' கொடுத்தான்!

நடந்தது இதுதான். முரடன் ஆசிரியரிடம் ஓடினன்; அழுதான்; இல்லாததை எல்லாம் சொன்னன். அவருக்கும் வந்தது கோபம்! நல்ல தம்பியை அழைத்தார்; அடித்தார்; முரடன் கைகொட்டி சிரிக்கும்வரை அடித்தார்.

ரோசக்காரத் தம்பி அடியை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடிவந்தான். அப்பாவிடம் நடந்ததைச் சொன்னன். "இனி பள்ளிக்கூடம் போகவே மாட்டேன்" என்றும் பிடிவாதம் செய்தான்.

அப்பாவுக்கும் கோபம் வந்துவிட்டது. "பள்ளிக்கூடம் போகமாட்டாயா? அப்படியானல் உன் மாமன் வீட்டுக்கு மாடு மேய்க்கப் போ" என்று கத்தினர்.

"பின்னே என்னப்பா? வாத்தியார் செய்தது தப்பு தானே? நான் மறுபடியும் அவரிடம் எப்படி படிப்பதாம்?" என்று தம்பி எதிர்த்துப் பேசினன்.

அப்பாவுக்குக் கோபம் குறையவே இல்லை. "நாடே போற்றும்படி உயர்ந்தவன் ஆவேன்...அப்படி...இப்படி என்று பிதற்றுவாயே, அது இப்படித்தானு?" என்றுர்.

தம்பி அப்பாவை ஒருமுறை பார்த்தான். இரண்டே இரண்டு வார்த்தை—"ஆகிறேன் பாருங்கள்" என்ருன். ரோசத்துடன் வீட்டைவிட்டு வெளியே வந்தான். 'கிர்' ரென்று நடந்தான். மேஜர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ருன். தன்னை ராணுவப் பள்ளியில் சேர்த்துக் கொள்ளும்படிக் கெஞ்சினன். தம்பியின் துணிவைக் கண்டு மேஜர் வியந்தார். 'சரி' என்ருர். அவனும் சேர்ந்து விட்டான்.

சேதி கேட்ட அம்மா 'ஓ' வென்று அழுதார்கள். அப்பாவும் வருத்தப்பட்டார்கள்.

பன்னிரெண்டு வயதிலேயே அப்பாவுடன் சபதமிட்டு—ராணுவப் பள்ளியில் தானகவே சேர்ந்துவிட்ட அந்த பால வீரன் யார் தெரியுமா?

அவன்தான் வீழ்ந்து கிடந்த துருக்கி நாட்டுக்கு வாழ்வு தந்த லட்சிய வீரன்—துருக்கியின் தந்தை—கமால் பாட்சா!

## பெரிய மனிதர்கள்

## கருணாநிதி

### நிகழ்ச்சிகள்

30—9—54 பனமலை
1—10—54 லால்குடி வட்டம்
10-10-54 மீர்சாகிப்பேட்டை (சென்னை)
17-10-5+ கும்பகோணம்
24—10—54 சேத்துப்பட்டு (சென்னை)

# அக் 9! கவனமிருக்கட்டும்!

அக்டோபர் 9-ம் தேதி வருகிறாராம்! தென் புலத்து மக்களை தவிக்கவிட்டு, அவர்கள் வடித்த கண்ணீரில் தல்வாட்டம் போடும் கொழும்புக் கோமான் கொத்தலைவாலை டில்லித் திருநகருக்கு வருகிறாராம்! தனி மனிதராக மட்டுமல்ல; செல்வாக்கு மிகுந்த தூதுக் குழுவுடன் வரப்போகிறாராம்! தமிழரின் வேதனைக் குரலை உச்சிக்கட்டம் வரை சோதனை செய்து பார்த்தவர், அலட்சியப் புன்னகையால் அவர்களின் ஆற்றொணாத் துயரத்தை வெறுத் தொதுக்கியவர் வழிய வருகிறாராம் டில்லி மாநகரம் நோக்கி!

ஏன் வருகிறார்? தவறு செய்துவிட்டேன் தமிழர்களுக்கு, என தண்டனிட்டுக் கேட்டுக்கொள்ளவா? அல்லது தமிழர் வாழ்வு எம் வாழ்வு, கடந்ததை மறந்திடுக என்று கேட்டுக் கொள்வதற்காகவா? இல்லை! நிச்சயமாக இல்லை! வில் வளைவது வேங்கைக்கு அஞ்சியல்ல; புலிபதுங்குவது புள்ளிமானுக்கு மிரண்டு அல்ல! நாமறிவோம் கொத்தலவாலை டில்லிக்கு காவடி தூக்கியிருக்கும் நோக்கம் ஏன் என்பது பற்றி.

டில்லி ஒப்பந்தத்தை கிள்ளுக்கீரையாக மதித்த அந்தப் பெரிய மனிதர், இலங்கை—இந்தியா சதுரங்க விளையாட்டிற்கு டில்லி தந்த முறிச்சீட்டை ஒரு ஆட்டக் காயாக பயன்படுத்தவே கொத்தலவாலை தலை நகரம் பறந்து வருகிறார் என்பதை அரசியல் வட்டாரத்திலே பழகிக் கொண்டிருப்பவர்கள் நன்கறிவார்கள்.

தாயகத்து பிரஜையாவதற்கு டில்லி ஒப்பந்தம் அனுமதித்திருப்பது மெய்தான். ஆனால் கொடுமை பல புரிந்து, தாயகத்து பிரஜை யாவதைத் தவிர வேறு வழியில்லாதுசெய்வதற்கு இலங்கை அரசை அனுமதிக்க இந்திய ஆட்சி பீடம் இணங்கும் என்று எதிர்பார்ப்பது கல்லில் நாருரிப்பதாகும். இரண்டாவதாக, இலங்கை பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்படாதவர்களை இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற ஆசைக் கனவுகள் கண்டு கொண்டிருக்கிறார் கொத்தலவாலை. டில்லி ஒப்பந்தத்தை முன் வைத்து வாதிட வந்திருக்கும் சர் ஜான். ஒப்பந்தத்திற்கு முரணாக என்னென்ன அட்டூழியங்கள் செய்திருக்கிறார் என்பதை சிந்தித்துப் பார்த்திருப்பதாகத் தெரியவில்லை. ஜால வித்தைகள் செய்து ஜவகரின் ஒப்புதல் பெற்றுவிடலாம் என்று எண்ணித் தான் கொத்தலவாலை துணிந்து விமானமேறியிருக்கக் கூடும். சமுத்திரம் கடந்து வாழும் சங்கத் தமிழரின் நல் டிப்பான பேச்சில் தான் அடங்கி இருக்கிறது. துணைக் கண்டத்தின் முதலமைச்சர் என்ற முறையில், அவசர முடிவுக்கு வந்துவிடக்கூடியதல்ல இலங்கை இந்தியர் பிரச்னை. சம்பந்தப்பட்ட சென்னை சர்க்காரை கலந்தாலோசிக்கவேண்டும். தீர்ப்பைப் பின் தொடரும் சாதக பாதகங்களை முன் கூட்டியே ஆய்ந்துபார்க்க வேண்டும். மேலிடத்தைப் பொறுத்ததென்று காமராசரும் இதை விட்டு விடுவதற்கில்லை; கலந்தாலோசித்து இலங்கை வாழ் தமிழ் மக்களை கைதூக்கிவிட வேண்டிய பொறுப்பு காமராசரிடம் தானிருக்கிறது. தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவர்களெல்லாம் 'கவனமிருக்கட்டும் காமராசரே' என்று தான் சொல்லுவார்கள். என்ன செய்யப்போகிறார்களோ தெரியவில்லை. நாள் நெருங்குகிறது. ஆமாம்! அக்டோபர் 9!

---

### சக்கரவர்த்தி ...

[ 5-ம் பக்க தொடர்ச்சி ]

அவர் எழுத்து அழகு இருக்கிறதே; அடடா—அந்த அனுமாருக்குத்தான் வெளிச்சம்!—

இதோ ஒரு உதாரணம் பாருங்கள்—செப் – 19-கல்கியில் எழுதுகிறார்.

"ஜனங்கள் கூட்டம் கூட்டமாக நின்று, ராமனும். சீதையும், லக்ஷ்மணனும் காலால் நடந்து போவதைக்கண்டார்கள்."

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்! அப்போதெல்லாம் மக்கள் தலையாலும், கையாலும் நடந்து போவார்கள், அந்தப் பாவி கைகேயி, ராமலக்ஷ்மணரை காலால் நடந்துபோகக்கட்டளையிட்டுவிட்டாள் என்றுதானே!- காலால் நடந்து போனார்களாம் காலால்! ஆச்சாரிய மேதை எழுதுகிறார் இப்படி!—அதையும் பக்தியோடு படிக்க ஆஞ்சனேயக் கும்பல் காத்திருக்கிறது!—வக்காலத்து வாங்கி வாழ்த்துப்பாட, சுதேசமித்திரன் போன்ற ஆரியக்காவல் படைகள் காத்துக்கிடக்கின்றன. காகபட்டர்எதையும் எழுதுவார்—எதையும் பேசுவார்! — இதெல்லாம் மேதையின் இலக்கியமய்யா இலக்கியம்!

---

### லட்சிய...

4-ம் பக்க தொடர்ச்சி

மக்களை அமைதிப்படுத்தி, "பிரான்ஸ் நாட்டின் பொது மக்களே!! நம்மைக் கசக்கிப் பிழிந்து நல்வாழ்வு நடத்திய மன்னனும் அவனதுபின்னேடிகளும் பிணமானார்கள். மணிமுடி மண்ணிலே உருண்டு விட்டது. இனி நம்நாடு குடியரசு நாடு. ஏழை—பணக்காரன், ஆண்டான் — அடிமை என்ற பாகுபாடு இராது" என்று பேசி முடித்தான். வாழ்த்தொலிகள் வானை

---

# ஐ. நா. சபையா? ஆடம்பரச் சாவடியா?

★

''சைப்ரஸ் எங்களைச் சார்ந்தது. அது பிரிட்டனுக்குச் சொந்தமாகாது'' என்று கிரீஸ் நாட்டார் கேட்பது, பாகிஸ்தானியர் மதத்தின் அடிப்படையில் கேட்டதைப் போன்றதல்ல; தாஜ்மஹாலைக் காட்டி 'தாருங்கள் தனிநாடு' என்பது போல கூட கேட்கவில்லை. பிரிட்டன் பிரபுக்களே, வரலாறு பேசுகிறது சைப்ரஸ் எங்களது என்று — என்ன சொல்கிறீர்கள்என்றுதான் கிரீஸ் வாசிகள் கேட்டார்கள். உலக நீதிமன்றமாம் ஐ. நா. சபையிலும் அதை ஒலிக்கச் செய்திருக்கிறார்கள்.

வெள்ளைக்காரர்கள் மிக நல்லவர்கள்! சைப்ரஸ் பிரச்சினையில் பிரிட்டன் நடந்து கொள்வதைப் பார்த்தால், சைப்ரஸ் கிரீஸ் நாட்டைச் சேர்ந்ததுதான் என்பதை மறுப்பதாகத் தெரியவில்லை—காரணம் மறுப்பதற்கு அவர்களிடம் ஆதாரமில்லை. அதனால்தான் சைப்ரஸ் பிரச்சினையை விசாரிக்க அதிகாரமில்லை ஐ. நா. சபைக்கு, என்று பிரிட்டனின் ஐ. நா. தூதுக் குழுத்தலைவர் செல்வின் லாயிட் தெரிவித்திருக்கிறார். ஐ. நா. சபை இதை விசாரித்தால் நேசநாடுகளிடையே தகராறு வளருமாம்—வெள்ளையர்கள் மட்டும் சைப்ரசை ஜீரணித்துக் கொண்டிருக்கலாமாம்! துரைமகன் சொல்லுகிறார். வெள்ளையர்கள், கிளைவ் காலத்திலேதான் கெடுபிடி செய்தார்கள் என்று எண்ணினோம், வெல்லெஸ்லி காலத்திலேதான் மண்ணாசை கொண்டு அலைந்தார்கள் என்று பெருமூச்சு விட்டோம்; ஆனால் சைப்ரசின் விடுதலைக் குரல் நெறிக்கப்படுவதை அறியும்போது, புவியாளும் பேராசை பிரிட்டனை இன்னும் விடவில்லை போலும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆனால் ஒன்றுமட்டும் உறுதி; ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு மங்கிக் கொண்டுவரும் இத்தருணத்தில், பிரிட்டனின் மிரட்டலுக்கு அஞ்சி. ஐ. நா, சபை, சைப்ரஸ் பிரச்சினைக்கு உலைவைக்க முயன்றால்; ஐ. நா. சபை தொட்டது துலங்கியதில்லை—அது வெறும் விளம்பரச் சாவடிதான் என்று உலகம் தீர்மானித்துவிடும். வெண்புறு சிறகடிக்க வல்லூறுகள் இடந்தராது,

---

# நம்ம சர்க்கார், மிக நல்ல சர்க்காராம்!

'இரக்கச் சித்தம்' மனிதனை மேம்பாடடையச் செய்கிறது என்பது உண்மைதான். ஆனால் உதவி செய்ய வகையில்லாதபோது காட்டும் இரக்கம் பயனில்லை என்ற கூற்றையும் மறுப்பதற்கில்லை. என்றாலும் தான் செய்த தவறுக்காகக்கூட பாதிக்கப்பட்டவர்களுக்கு, அதுவும் வசதியுள்ளவர்கள், சரியான பொருளீடு செய்யவில்லையென்றால் — அந்த வன் கொடுமை கண்டிக்கத் தக்கது தானே!

தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலும் சென்ற ஆண்டு காங்கிரசார் நடத்திய துப்பாக்கித் துரைத்தனத்தால் சிலர் மாண்டார்கள், அதை இந்த சர்க்கார் மறுப்பதற்கில்லை. துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட அந்தத் தோட்டாக்கள் குறிதவறிப் போய் தோழர்களின் உயிர்களைக் குடித்துவிடவில்லை. களத்திலே திரண்டிருந்த மக்கள் சக்தியை கலைத்துவிட எண்ணி, வேண்டுமென்றே செய்த துப்பாக்கிப் பிரயோகங்கள் தான் அந்த இரு இடங்களிலும் நடந்தவை. இளங்காளைகளை இழந்து இன்னும்மரணஓலமிட்டபடியிருக்கும் அந்த சாவுமனைகளுக்கு திருப்திகரமான பொருளீடே இந்த ஆளவந்தார்கள் கொடுக்கவில்லை. சுடவேண்டுமென்று, சுட்டுக் கொன்ற கோரக்கொலைகள்! அதற்கு வகை கிடையாது. ஆனால் தவறாக நடந்து விட்ட ஒரு பலிக்கு. செத்தவர் வேறு நாட்டுக்காரராக இருந்தாலும் அதற்கு நஷ்டஈடு 10 லட்சம் பொன் தந்திருக்கிறது அமெரிக்க நாடு. ஆம், ஹைட்ரஜன் குண்டுக்கு முதல் முதலாக பலியான ஜப்பானிய செம்படவரான திருமதி ஐகிசி குபோ யாமாவின் விதைவைக்கு 10 லட்சம் யென். செக் ஒன்றை அமெரிக்க தூதர் தனது அனுதாபச் செய்தியுடன் அனுப்பியிருக்கிறார். தோழர்களே. அங்கே ஹைட்ரஜன் குண்டால் கோலை செய்தது அமெரிக்கா, செத்தது ஜப்பானியப் பெண்! இங்கே சுட்டது 'நம்ம சர்க்கார்'—செத்தது நம் தோழர்கள்! ஆனால் நஷ்டஈடு எவ்வளவு கொடுத்தார்கள்—?

வறுமை பாய்ச்சும் கூர் வாட்கள்-ஏழ்மை அள்ளித் தெளிக்கும் துன்பச் சுமைகள்—விஷம் கக்கும் விரோதிகளின் தடைகள்—இத்தனைக்குமிடையே சிக்கிச் சுழன்றுவும், கொள்கையின்பால் கொண்ட பாசப் பிடிப்பினால், அரசியல் பீடத்திலே அசையாத நல்லிடம் ஒன்றை ஏற்றவரைத் தான், பொது வாழ்வில் புதுமையாளனாக உலகம் ஒப்புக் கொள்கிறது.

உலக சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டினால், அந்தப் பொன் முத்திரையைப் பதித்தோர் ஒரு சிலரே! அந்தச் சிலரில் ஒருவர்தான் மா சே துங்.

உலகத்தின்கண்ணோட்டத்தை ஓரளவு சுண்டி இழுக்கும் சக்தி பெற்ற புது சீனாவின் பிதா—செங்குருதி சிந்தி சீன மண்டலத்தே செங்கொடி உயர்த்தியவன்-ஏழைகளை சிரிக்க வைத்தவன்-உழவர் பெரு மக்களின் ஒரே தலைவன்—இப்படி யெல்லாம் உலகம் மா சே துங்கிற்கு அடைமொழியிட்டு அழைக்கிறது. அவரது அரசியல் அனுபவத்தை-சாதனைகளை வாய் நிறைய வாழ்த்துகிறது.

மா சே துங் இப்படி ஏழைகளின் ரட்சகனாக—புதிய ஜன நாயகத்தின் சிருஷ்டி கர்த்தாவாக மாறியதற்கு முதல் காரணம் அவரது பிறப்புதான். செல்வன் ஒருவனின் மகவாக அவர் பிறந்திருந்தால், சிறப்பின் அரவணைப்பிலேயே அவரது உல்லாச வாழ்வு ஓடிக் கொண்டிருந்திருக்கும். ஆனால் மா சே துங் ஒரு ஏழை உழவனுக்கு—அவரது நிம்மதிக்குப் பங்கமாகப் பிறந்தவர்.

உழவர்களின் உடலைக் கசக்கிக் கொண்டிருந்த உழைப்பும், அரச பீடத்தினர் வீசியவண்ணமிருந்த வரி எனும் சுறுக்குக் கயிறுகளும், மா சே துங்கிற்கு பெரும் மனப் புகைச்சலை உண்டு பண்ணின. தந்தையும் சார்ந்தோரும் ஏற்ற நிந்தனைகள் அவரது பிஞ்சு நெஞ்சத்திலே "ஏன் இந்த நிலை?" என்ற சிக்கலான கேள்வியைத் தட்டி விட்டன.

அந்தச் சூழ்நிலையின் சுய ரூபம்தான் மா சே துங்கின் இரத்தத்திலே 'விடுதலைப் பித்தை'க் கலந்துவிட்டது. அந்த உரிமைப் பிடிப்புதான் விபரமறிந்த நாள் முதல் அவரை ஒரு போராட்ட மனிதனாகவும் ஆக்கி விட்டது.

ஒன்பதாவது வயதிலேயேஅவர் 'உரிமைப் போராட்டம்' ஒன்றை நடத்தி யிருக்கிறார். தந்தையின் முர்க்கத்தனமான கோபத்தை எதிர்த்தாராம். வீட்டை விட்டு வெளியேறி, காடு மலைகளைச் சுற்றினாராம் மூன்று நாட்கள். தேடி வந்த தந்தையிடம் நிபந்தனை பெற்றுதான் பின் வீடு திரும்பினாராம். தனது 'வேலை நிறுத்த'த்தில் வெற்றியையே கண்டாராம். இப்படிப்பட்ட பால பருவத்து ருசிகரச் சம்பவங்கள் அவரது வாழ்க்கை ஏட்டின் முதல் அத்தியாயத்தில் நிறைய கிடக்கின்றன. அவைகளின் தொடர் நிலைதான் அவரை ஒரு இருபத்தோன்பது

# பொதுவாழ்வு

## மக்கள் மணி மா சே துங்

ஆண்டு கால போராட்ட வீரனாக, தாயகத்தை மீட்ட தனிப் பெரும் தலைவனாக நமக்குக் காட்டுகிறது.

ஏகாதிபத்தியம்—நில பிரபுத்துவம் இரண்டையும் அணைத்துக் கொண்டிருந்த 265 வருட காலமமதை குன்று மஞ்சு அரசாட்சி-அதன் பின் சீன சரித்திரத்தில் பயங்கரக் காரிருள் கவிந்த கட்டமாம் சியாங் கேய் ஷேக்கின் கோமின்டாங் ஆட்சி காலம்—இவைகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தசீனாவின்நாற்பந்தைந்து கோடி மக்களை 'தங்க மைனா தோழர்களைத்தேடி சந்த மிசைக்கிறது' என்ற போராட்ட கீதம்பாடி களம் அமைத்து வெற்றி கண்டவர் மா சே துங். அந்த வெற்றியைத்தேடி அவர் நடத்திய பெரும் பயணத்தில் ஏற்ற தொல்லைகள் ஏராளம்!



இருபத்தி எட்டாவது வயதில் அவர் தனி மனிதனாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்த நேரம் முதல் அன்றைய தேசீய இயக்கத்தின் கொள்ளிக் கண்களிலே சிக்கிவிட்டார். உழவர்களின் பேராதரவுடன், அந்த ஏழைகளின் கட்சி செயல் புரியத் தொடங்கிய நேரத்தில் தேசீயப் படையின் நேரடித் தாக்குதலையும் ஏற்க வேண்டியவரானார்.

அடி வைத்த பாதையிலே ஆட்சியாளரின் தடை—அல்லல்களின் பேயாட்டம்! அவைகளைத் தடுத்து, பாதையின் எல்லையைத் தொட—வெற்றியைக் காண அழியாத சக்தி தேவை! இப்படி எண்ணமிட்ட மா சே துங்80,000 ஏழை உழவர்கள் பின் தொடர, 6,000 மைல் நீளமுள்ள பயணம் ஒன்றை கால் நடையாகஓராண்டு காலம் நடத்தினாராம். சீனச் சரித்திரத்தில் "பெரும் பயணம்" என்ற சிறப்போடு அழியாத இடம் பெற்றுவிட்டது அந்தச் சம்பவம்! பெரும் சோகக் கதையை இரத்தக் காவியத்தைப் படைத்த அந்த வீரச் சம்பவத்தில் 60,000 வீரர்களை பலி யேற்றுக் கொண்டது சீனா. மா சே துங் தனது ஐந்து குழந்தைகளை அந்த பயணத்திற்கு காணிக்கை படைத்திருக்கிறார். பிறந்த இடத்திலேயே சிசுக்களை கண்ணிலே கண்டவர்களிடம் ஒப்படைத்துவிட்டு அவரும், மனைவியாரும் கடமையாற்றியிருக்கிறார்கள். அப்போது பிரிந்து சென்ற அந்தக் குழந்தைச் செல்வங்களை அவர் இன்னும் சந்திக்கவில்லையாம். ஏழைத் தகப்பன் இன்று பார் போற்றும் வீரத் தலைவன் என்பதை—உயிரோடிருந்தால், சீனத்தின் எங்கேயாவது ஒரு மூலையில் இருக்கும் அந்த குழந்தைகள் இன்னும் உணர முடியவில்லை. கதைபோல் இருக்கிறது இந்த வேதனை நிகழ்ச்சி. எனினும் மா சே துங்கின் வாழ்க்கையிலே —அவர் கொண்ட கொள்கை வெறியின் விளைவாக இதைப் போன்ற நெஞ்சு குலுக்கும்சம்பவங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன.

'பெரும் பயண'த்தில் மாண்டவர் போக மீண்டவரை சந்தடியற்ற மலைக் காடுகளுக்கு அழைத்துச் சென்றார் மா சே துங் அங்கே. அவர்களுக்கு குடியரசை கற்பித்தார். அதன் புனிதத் தன்மையை போதித்தார். எத்தர்களின்கையில் சிக்கிச் சிதையும் சீனத்தை ஏழைகளின் சொந்த பூமியாக்குவோம் என்று முழங்கினர். விடுதலை வேட்கையைத் தூவினர். வீறு கொண்டெழுந்த அவர்களைக் கொண்டு ஆட்சிபீடத்துடன்சமர்க் களம் அமைத்தார். கொரில்ல முறை என்ற புதுப்பாணியிலே போர் தொடுத்தார். வெற்றியும் கண்டார். சீனத்தை குடியரசாக பொதுநலப் பூங்காவாக அமைத்தார்.

கோமின்டாங் வெறியர்களின் அட்டகாசத்தாலும், விடுதலைப் போரின் விளைவாலும் இரத்தக் காடாகிவிட்ட சீனத்தை ஐந்தே ஆண்டுகளின் வியத்தகு 'விந்தை பூமி'யாக மாற்றிவிட்டார்.

மா சே துங்கின் சொந்த வாழ்க்கையும்,அவரது தாயகத்தைபோல குழப்ப நிலையில்தான் இருந்திருக்கிறது. தந்தை தேடிவைத்த முதல் மனைவியுடன் அவர் வாழ விரும்பவில்லை. காதலித்து மணந்த இரண்டாவது மனைவியை விடுதலைப் போரில் பலிகொடுத்தார்; கட்சிஎதிரிகளால் படுகொலை செய்யப்பட்டார் அந்த அம்மையார். மூன்றாவது மனைவி காசம் பீடிக்க விலகிவிட்டார். கடைசியில் தனது நான்காவது நடிக மனைவியுடன் பீக்கிங் நகரத்து சதாரண டகுதி ஒன்றில் வாழ்ந்து வருகிறார். அவரது எளிய வாழ்க்கையே, அவர் ஒரு குடியரசு நாட்டின் தலைமைக்கு தகுதியானவர் என்பதை பறைசாற்றி வருகின்றது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஏற்றப்பட்ட ஐந்து நட்சத்திரங்களைக் கொண்ட சீனத்துச் செங்கொடி, 'சீனா ஒருவல்லரசு ஆகும்' என்று பெருமிதத்துடன் பறந்து கொண்டிருக்கிறது. அதை ஏற்றி வைத்த விடுதலை வீரர்? மா சே துங் ஆதிபத்திய வெறியர்களுக்கு மத்தியில் சமாதான தூதுவர்களில் ஒருவராக போற்றப்படுகிறார்!


**முரசொலி**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. 6-0-0 |
| ஆறு மாத சந்தா | ரூ. 3-8-0 |

*ஆறு மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

— 'நிர்வாகி'



**வெளிவந்து விட்டது!**

**மு. கருணாநிதி தீட்டிய**

# அம்மையப்பன்

[ கதை வசனம் பாடல்களுடன் ]

*

உரிமை பதிவு செய்யப்பட்டது.

அழகான முகப்புடன் விலை எட்டணா

கழிவு 40 சத விகிதம்.

*முரசொலி ஏஜெண்டுகள் கழிவு நீக்கி முன்பணம் அனுப்பவும் அல்லது வி. பி. மூலம்தான் அனுப்ப இயலும்.*

— வெளியீடு —

**முனகானா பதிப்பகம்**

சென்னை-14,

# கடைசிப்பக்கம்

தயாராகிறது !

**பேசும் படம்**

நவம்பர் 1954

**விசேஷ இதழ்.**

விலை ரூ 1—4—0

பேசும் படம் ★ சென்னை 14.

என். சுந்தரம்—பி. எஸ். ஸி. சென்னை.

(?) "பத்ம விபூஷண்" என்ற பட்டத்தை நிராகரித்த திருமதி ஆஷாதேவி அவர்களுக்கும் அதைப் போன்ற பட்டங்களைக் கௌரவமாக ஏற்றுக்கொண்ட மற்ற அறிஞர்களுக்கும் உள்ள வித்தியாச மென்ன?

*வித்தியாசத்தை ஏன் நண்பரே விளக்க வேண்டும்! ஆஷாதேவி இந்த செயலின் மூலம் வீரப்பெண்மணி என்ற பட்டத்தை பொதுமக்களிட மிருந்து பெற்றுவிட்டார்.*

மா. மணிவண்ணன்—சூளை.

(?) புதையல் கதையில்வரும் மனோராவிற்கு செல்லும்பாதை எது?

*புதையல் தொடர்கதையின் அறிமுகக் கட்டுரையைப் படித்தால் போதும்—விளங்கி விடும்.*

கே. சுப்ரமணியன்—சென்னை-1.

(?) மனித வர்க்கத்தின் புனிதமான 'விழா' எது?

*மனிதவர்க்கத்தின் புனிதமான விழா—சொந்த நாடு சுதந்திரம் பெற்ற விழா தான் !*

இரா. சந்திரசேகரன் தியானபுரம் திருவாரூர்.

(?) திராவிட நாட்டின் எல்லையைத் தெரிவிப்பீர்களா?

*தெகிடுதத்தம் செய்து பிழைப்போரின் சொல்லேற்ற பிரதேசமே திராவிட நாட்டின் எல்லையென்பேன்.*

எஸ். மணியன்—ஆரணி.

(?) பூலோகத்தில் கவர்னர் ஜெனரலாக, முதன் மந்திரியாக இருந்து ஓய்வு பெற்ற ஆச்சாரியார் தேவலோகம் சென்றால் என்ன பதவி பெறுவார்?

*தேவலோகம், நரகலோகம் என்பதெல்லாம் இருந்து, ஆச்சாரியார் தேவலோகந்தான் போவார் என்பதும் தீர்மானமானால், ஆச்சாரியார் அங்கே வகிக்கும் பதவி, மதுப்பிரச்சார மந்திரி பதவியாகத்தான் இருக்கும். சோமசுரா பானங்கள் இல்லாமல் தேவர்களால் வாழ முடியாதே! அதனால் சொல்லுகிறேன்.*

என். சம்பந்தம்—சென்னை-1.

(?) விடுதலையில் ராஜா சிதம்பரம் தேர்தல் விளம்பரம் வருகிறதே; அப்படியானால் விடுதலை அவரை தேர்தலில் ஆதரிக்கிறதா?

*சினிமாவை வெறுக்கும் விடுதலையில் சினிமா விளம்பரம் கூடத்தான் வருகிறது — அது போலத்தான் இதுவும் என்று கருதுகிறேன்.*

ஆர். பெருமாள்-காஞ்சீபுரம்

(?) மக்கள் விரும்பாத கற்பனை திராவிட நாட்டை கேட்கிறீர்களே; ஏன்? திராவிட முதலாளிகளை பாதுகாக்கவா?

*மக்கள் என்றால், உம்மையும் சேர்த்து ஏனய்யா தப்புக்கணக்குப் போட்டுக் கொள்கிறீர்கள் ? தி. மு. கழகம் திராவிட முதலாளிகளை பாதுகாப்பதல்ல; தேசிய முதலாளி ஜி. டி. நாயுடு எனக்கூறி அவரை ஆதரித்தது யாரென்று நாட்டுக்குத் தெரியும்?*

ம. அரங்கராசன்-திண்டுக்கல்.

(?) அன்பின் எல்லை எது?

*ஏது அதற்கு எல்லை?*

ஜக்ரியா—இராயப் பேட்டை.

(?) மங்கோலிய இனமும் மகமதிய இனமும் வேறு வேறானவைகளா?

*ஆமாம்; அதில் ஏன் உமக்கு சந்தேகம் வந்தது ?*

பி. மலையான்—சென்னை

(?) அலெக்சாண்டர் கொல்லப்பட்டது சென்றவாரம் நச்சுக்கணையில் குறிப்பிட்டிருந்தபடிதானா எமது சொந்தக் கற்பனையல்லவே

*அது. தி. நா. சுப்ரமணியம் எழுதிய 'தோட்டியை மணந்த இளவரசி' என்ற நூலில வெளிவந்துள்ள 'யாருக்கு வெற்றி' என்ற கட்டுரையை ஒருமுறை படித்துப் பாருங்கள்.*

★★★★★★★★★★★★★

கலைவானுக்கு ஓர் விடி வெள்ளி
பத்திரிகை உலகிற்கு ஓர் புதுமை

**சினிமா நியூஸ்**

உயர்தர சினிமா கலைப் பத்திரிகை

ஆசிரியர் : **கலைவேந்தன்**

அக்டோபர் முதல் வாரத்தில் வெளிவருகிறது

தனிப்பிரதி விலை **அணா 2.**

சினிமா-நியூஸ் சென்னை-2

★★★★★★★★★★★★★

**இன்று முதல் 2-வது வாரம்**

நேஷனல் புரடக்ஷன்சாரின்

**அம்மையப்பன்**

...கதை-வசனம்...

**மு. கருணாநிதி.**

டைரக்ஷன் :

★ **பீம்சிங்** ★

சென்னை : பாரகன்; கிரௌன்; உமா; நூர்ஜஹான் மற்றும்

**தமிழ்நாடெங்கும் !**